www.padippakam.com

# இனம்

கவிதைகளுக்கான காலாண்டு இதழ்











தங்களை ட்ரக்குகளுக்குள் தூக்கியெறிந்து
ஆயுளுக்கும் சிறையிடப் போகும்
அந்த பூட்ஸ் கால்களின் ஒலிக்காய்
அவர்களின் காதுகள் கூர்மையாகியிருக்கும்

இதழ்-03 2001 நவம்பர் ரூ.70.00

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

## உள்ளே...

### கவிதை

திருநகரூர் ஜெகா
நா.விச்வநாதன்
யாத்திரீகன்
யாழ்வீரன்
எஸ்.உமாஜிப்ரான்
அநாமிகன்
பு.சிந்துஜன்
ஆவரங்கால் சுதன்
கருணாகரன்
ந.மயூரரூபன்
கருணைரவி
த.ஜெயசீலன்
கலாப் ஃபர்ஹதி
திசைவீரசிங்கம்
கந்தையா ஸ்ரீகணேசன்
பாலைநகர் ஜிஃப்ரி
எஸ்போஸ்
அனார்
ஆத்மரிஷி
மீனா அருணாசலம்
கனகரவி

### மொழிபெயர்ப்புக் கவிதை

குழல்
கந்தையா ஸ்ரீகணேசன்

### கட்டுரை

சு.ஜெயச்சந்திரன்

### தொலைபேசி உரையாடல்

-கவிஞர் சோ.பத்மநாதன்

### சமகால வாழ்வு குறித்த மீள் வாசிப்பு

சி.சிவசேகரம்
ந.ரவீந்திரன்
மயூரன்
பாஸ்கரன்
பத்மா ஜெயச்சந்திரன்
சித்தாந்தன்

'நிலம்' கவிதைகளுக்கான காலாண்டு இதழ் சந்தா விபரம்

| | |
|---|---|
| தனி இதழ் | ரூ. 70.00 |
| ஆண்டுச்சந்தா | ரூ. 210.00 |
| இரண்டாண்டுச் சந்தா | ரூ. 420.00 |

சந்தாத்தொகையை சந்திரபோஸ் சுதாகர் என்ற பெயரில் பணவிடையாகவோ வரைவோலையாகவோ அனுப்பவும்

தொடர்பு முகவரி:
ஆசிரியர்,
நிலம் ,87, வியாசர் வீதி, தோணிக்கல் வவுனியா.

வடிவமைப்பு: எஸ்போஸ்

ஒளிஅச்சு:
MULTIVISION



படிப்பகம்

www.padippakam.com



தலையங்கம்

## கைதுகளுக்கும்

## சித்திரவதைகளுக்கும் எதிராக...

எல்லாமே மிக வேகமாக
மாறிக்கொண்டிருக்கின்றன. எனினும் எமது காலமே இன்னும் அதே வன்மத்தோடும் துயரத்தோடும் கண்ணீரோடும் தான் நகர்ந்து கொண்டிருக்கிறது. நிலம் இதழின் வெளிவருகையில் ஏற்பட்ட தாமதம் காலத்தின் இந்த வன்மம் நிறைந்த நகர்வுதான் என்பதை நீங்கள் புரிந்து கொள்வீர்கள்.

விடிவு பற்றிய ஏக்கமும் தவிப்பும் எல்லா மனிதர்களிடத்திலும் தேசம் கடந்து விரவிக்கிடக்கின்ற போதிலும் இரத்தச்சகதியான இந்த வாழ்வின் மீதான பயணம் குறித்த பீதி எல்லாவற்றையுமே தின்றுவிடுகிறது.

நாங்கள் பயத்தின் மீதும் சிலுவையின் மீதும் அறைந்தறைந்து ஒளியிழக்கச் செய்த எமது சொற்களை மீட்டெடுப்பது எப்போ?
இன்று
எழுதப்பட்டவை பற்றியல்ல எழுதாமல் விடப்பட்டவை பற்றியே பேச வேண்டியிருக்கிறது.
எல்லாம் எழுதப்பட்டு விட்டது என நாங்கள் கருதினால் படைப்பின் மூலம் அநீதிகள் என திரும்பத்திரும்ப வலியுறுத்தப்பட்டவை மீளவும் மீளவும் தலைவிரித்தாடுகிறது எனின் எமது எழுத்தின் மூலம் சிறிதளவேனும் சமூக மாற்றமோ அரசியல் மாற்றமோ நிகழவில்லை என்ற எண்ணம் எம்முள் மூளும் எனின் அது பற்றியே நாங்கள் சிந்திக்கவும் பேசவும் வேண்டியிருக்கிறது.

மிகுந்த அடக்குமுறைக்குள்ளாகும் ஒரு சமூகத்திலிருந்து அல்லது ஒரு சிறுபான்மை





படிப்பகம்

www.padippakam.com

**உள்ளே...**


கவிதை

திருநகரூர் ஜெகா
நா.விச்வநாதன்
யாத்திரீகன்
யாழ்வீரன்
எஸ்.உமாஜிப்ரான்
அநாமிகன்
பு.சிந்துஜன்
ஆவரங்கால் சுதன்
கருணாகரன்
ந.மயூரரூபன்
கருணைரவி
த.ஜெயசீலன்
கலாப் ஃபர்ஹதி
திசைவீரசிங்கம்
கந்தையா ஸ்ரீகணேசன்
பாலைநகர் ஜிஃப்ரி
எஸ்போஸ்
அனார்
ஆத்மரிஷி
மீனா அருணாசலம்
கனகரவி

மொழிபெயர்ப்புக் கவிதை

குழல்
கந்தையா ஸ்ரீகணேசன்

கட்டுரை

சு.ஜெயச்சந்திரன்

தொலைபேசி உரையாடல்

-கவிஞர் சோ.பத்மநாதன்

சமகால வாழ்வு குறித்த மீள் வாசிப்பு

சி.சிவசேகரம்
ந.ரவீந்திரன்
மயூரன்
பாஸ்கரன்
பத்மா ஜெயச்சந்திரன்
சித்தாந்தன்



'நிலம்' கவிதைகளுக்கான காலாண்டு இதழ் சந்தா விபரம்

| | |
|---|---|
| தனி இதழ் | ரூ. 70.00 |
| ஆண்டுச்சந்தா | ரூ. 210.00 |
| இரண்டாண்டுச் சந்தா | ரூ. 420.00 |

சந்தாத்தொகையை சந்திரபோஸ் சுதாகர் என்ற பெயரில் பணவிடையாகவோ வரைவோலையாகவோ அனுப்பவும்



தொடர்பு முகவரி:
ஆசிரியர்,
நிலம் ,67. வியாசர் வீதி, தோணிக்கல் வவுனியா.



வடிவமைப்பு: எஸ்போஸ்

ஒளிஅச்சு:
MULTIVISION




படிப்பகம்

www.padippakam.com

நிலம் இதழ்03 நவம்பர் 27

தலையங்கம்

## கைதுகளுக்கும்

## சித்திரவதைகளுக்கும் எதிராக...

எல்லாமே மிக வேகமாக மாறிக்கொண்டிருக்கின்றன. எனினும் எமது காலமே இன்னும் அதே வன்மத்தோடும் துயரத்தோடும் கண்ணீரோடும் தான் நகர்ந்து கொண்டிருக்கிறது. நிலம் இதழின் வெளிவருகையில் ஏற்பட்ட தாமதம் காலத்தின் இந்த வன்மம் நிறைந்த நகர்வுதான் என்பதை நீங்கள் புரிந்து கொள்வீர்கள்.

விடிவு பற்றிய ஏக்கமும் தவிப்பும் எல்லா மனிதர்களிடத்திலும் தேசம் கடந்து விரவிக்கிடக்கின்ற போதிலும் இரத்தச்சகதியான இந்த வாழ்வின் மீதான பயணம் குறித்த பீதி எல்லாவற்றையுமே தின்றுவிடுகிறது.

நாங்கள் பயத்தின் மீதும் சிலுவையின் மீதும் அறைந்தறைந்து ஒளியிழக்கச் செய்த எமது சொற்களை மீட்டெடுப்பது எப்போ?
இன்று
எழுதப்பட்டவை பற்றியல்ல எழுதாமல் விடப்பட்டவை பற்றியே பேச வேண்டியிருக்கிறது.
எல்லாம் எழுதப்பட்டு விட்டது என நாங்கள் கருதினால் படைப்பின் மூலம் அநீதிகள் என திரும்பத்திரும்ப வலியுறுத்தப்பட்டவை மீளவும் மீளவும் தலைவிரித்தாடுகிறது எனின் எமது எழுத்தின் மூலம் சிறிதளவேனும் சமூக மாற்றமோ அரசியல் மாற்றமோ நிகழவில்லை என்ற எண்ணம் எம்முள் மூளும் எனின் அது பற்றியே நாங்கள் சிந்திக்கவும் பேசவும் வேண்டியிருக்கிறது.

மிகுந்த அடக்குமுறைக்குள்ளாகும் ஒரு சமூகத்திலிருந்து அல்லது ஒரு சிறுபான்மை





படிப்பகம்

www.padippakam.com




இனக்குழுமத்திலிருந்து இன்றுவரை
எழுதப்பட்ட எல்லாப் படைப்புகளுமே
அதனதன் தளத்தில் நின்று சமகால
வாழ்வையும் அவற்றின் அரசியல்
பரிமாணங்களையுமே பேசி வந்திருக்கின்றன,
ஒருசில படைப்புகள் இதற்கு விதிவிலக்காக
இருந்த போதிலும் இது நடந்தே வந்திருக்கிறது.

வாழ்வு குறித்தான இந்தப் படைப்பு
முறைமையை அல்லது படைப்பாளனைச்
சகித்துக்கொள்ள முடியாத,
ஒரு துப்பாக்கியையோ அல்லது கத்தி,
கோடரியையோ கூட கையில் எடுக்கத்
துணியாத.
அவற்றின் வருகைக்காக அஞ்சி ஒடுங்கும்
அப்பாவி மக்களின் மீது அடக்குமுறைகளைக்
கட்டவிழ்த்து விடும் அரசோ அல்லது அது சார்ந்த
இராணுவமோ அது சார்ந்த அமைப்புகளோ பலி
கொண்ட உயிர்களின் எண்ணிக்கை சொல்லில்
உயிர்ப்பிக்க முடியாதவை.

இவை குறித்த கண்டனங்களும்
குற்றச்சாட்டுகளும் தொடர்ந்த
வண்ணமிருக்கின்றன எனினும்,
படைப்பாளர்கள் சுட்டுக்கொல்லப்படுகிறார்கள்.
பத்திரிகையாளர்கள்
சுட்டுக்கொல்லப்படுகிறார்கள்.
கவிஞர்கள் சுட்டுக்கொல்லப்படுகிறார்கள்.
தொடர்ந்தும்
படைப்பாளர்கள்
கைது செய்யப்படுகிறார்கள்.
பத்திரிகையாளர்கள்
கைது செய்யப்படுகிறார்கள்.
கவிஞர்கள்
கைது செய்யப்படுகிறார்கள்.
இவற்றிற்கெதிராக மீண்டும் மீண்டும்
குரலெழுப்பவும் போராடவும் வேண்டிய நிலைக்கு
ஊடகத்துறையிலும் படைப்புத் துறையிலும்
இயங்கிவரும் சகலரும் முன் வரவேண்டும்.

இன்றைய தமிழ்ச் சூழலில்குறிப்பாக
இலங்கையில் ஏராளமான எழுத்தாளர்
சங்கங்களும் ஒன்றியங்களும் இலக்கிய



இலம் கவிதைகளுக்கான காலாண்டிதழ்



படிப்பகம்

அமைப்புகளும் இயங்கி வருகின்றன, இந்த இயக்கம் வெறுமனே கலை இலக்கிய ரீதியாக மட்டும் அமையாது தனிப்பட்ட முறையில் எழுத்தாளனுக்கோ பத்திரிகையாளனுக்கோ கவிஞனுக்கோ ஏற்படக் கூடிய அரசியல் மற்றும் வாழ்வியல் நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கவும் அவற்றிற்குத் தீர்வு காணவும் முன்வர வேண்டும்.

இந்தக் காலத்தின் மீதும் சூழலின் மீதும் மிகப் பொரிய மாற்றம் வேண்டி விடிவு வேண்டி தமது வாழ்வை நமக்காக அர்ப்பணித்த நமது மூத்த தலைமுறை எழுத்தாளர்கள் பலர் தமது கடைசிக் காலத்தில் அனாதைகளாகவோ அல்லது இது தமது மரண காலம் என்று அறியாமலே சாகடிக்கப்பட்டோரையோ நாங்கள் மிக நன்கு அறிவோம். இதில் துயரமானது என்னவெனில் அது இன்றும் நிகழ்ந்து கொண்டிருப்பதுதான்.

அடக்குமுறையாளர்களின் கொடூரம் ஒருபுறம் இடப்பெயர்வும் வறுமையும் நோயும் மறுபுறம் என சீரழிக்கப்படும் ஒரு எழுத்தாளனது குரலை நாங்கள் இந்தத் தேசம் முழுவதும் எடுத்துச் செல்லவேண்டியிருக்கிறது. இதற்காக ஒன்றிணையவும் குரல் கொடுக்கவும் உங்கள் ஒவ்வொருவருக்கும் உரிமை இருக்கிறது, இந்த உரிமைக்கான குரலாக நிலம் உங்கள் முன் வருகிறது.

நிலத்தின் வருகையில் ஏராளமான நண்பர்களின் பங்களிப்பு அதுவும் முகம் தெரியாத நண்பர்களின் பங்களிப்பு முன்வைக்கப் பட்டிருக்கிறது. நிலம் புதிய புதிய படைப்பாளர்களை இனங்காணவும் ஊக்குவிக்கவும் தயாராயிருக்கிறது, அது உண்மையின் குரலாகவும் வாழ்வின் குரலாகவும் உங்கள் முன் ஒலிக்கும். நீங்கள் நடக்கும் போதும் தடுமாறி வீழ்கிறபோதும் மீண்டும் மீண்டும் எழுந்திருக்கும் போதும் உங்களை ஆரத்தழுவிக்கொள்கிறது.

நிலம், பிரச்சினைகளின் முடிவு நோக்கிச் செல்லச் செல்ல அதற்கான பிரச்சினைகள் வலுவடைந்தும் அதிகரித்துக் கொண்டுமிருக்கின்றன, எனினும் உங்களது ஆதரவையும் ஒத்துழைப்பையும் அது வேண்டி நிற்கிறது.




சந்திரபோஸ் சுதாகர்

www.padippakam.com



## வாழ்க்கை அதன் போக்கில் போகட்டும்

Dr.Suresh Kanagarajah

யாழ் நகரின் மீது இருள் சூழ்கிறது
மனித நடமாட்டமே அற்றுப்போய்
ஆவிகளின் நகராகிப் போகின்றது.
ரவைகள் சல்லடையிட்ட
உடல்கள் மட்டும் வீதிகளில்
ஒரு பள்ளிச் சிறுமி..... ஒரு கிழவன்.....
நாளைய செய்திகளில்
“பயங்கரவாதி” களாகப் போகின்றவர்கள்
தூரத்தே எழும் வெடிப்புகளின் பின்னணியில்
மனிதம் வீடுகளுள் விரைகிறது
அறுபது மணிநேர ஊரடங்குக்காய்.

தங்களை ட்ரக்குகளுள் தூக்கியெறிந்து
ஆயுளுக்கும் சிறையிடப் போகும்
அந்தப் பூட்ஸ் கால்களின் ஒலிக்காய்
அவர்கள் காதுகள் கூர்மையாகியிருக்கும்
புத்திபேதலித்துப் போகாதளவுக்கு
உள்ளுரம் எஞ்சியிருக்க
தனித்த தங்கள் இருட்டுக்குகைக்குள்
அடைந்து கிடப்பார்கள்

நகரில் இருள் சூழுகிறதுதான்
எனினும்
தூரத்தே ஒரு சந்தில்
பலூன்களும் மின்குமிழ்களும் சேர்ந்து
சிறு வீடொன்றை அழகாக்குகின்றன
குழந்தையொன்றின் முதல் பிறந்தநாள்
அவநம்பிக்கைகள் தவிர்க்கும் விதமாய்
பெரியவர்கள் சூழ்ந்திருக்க
அவன் பெருமிதமாய் சிரிக்கின்றான்

நீ பெருமிதமாய் இருக்கின்றாய் அல்லவா?
ஆபத்தான பாதையில்
ஒரு முழு மைலை கடந்துவிட்டதாலா?
எதிர்வரப் போகும்
அரை நூற்றாண்டுச் சோதனைகளை
எதிர்கொள்ளலாம்
என்ற நம்பிக்கையிலா?
வாழ்க்கை அதன் போக்கில் போகட்டும்
அதன் பாதகங்கள் எப்படியாயினும்
வாழ்க்கை அதன் போக்கில் போகட்டும்.

*தமிழில்:குழல்*

## நிழல் பூத்திருக்கும் வழி பற்றிய கனவு

எனது குரல் நாண்கள் வலியெடுக்க
உடைந்து பேசும் பிரகடனத்தை
நான் ஏன் நிகழ்த்தவில்லை
இன்னும்.

முதுகெலும்பை தவறவிட்டு
வளைந்து கிடக்கிறதென் வாழ்வு.
எனது கண்களில் ஒளியைப் பூசவும்
கால்களில் வலுவேற்றவும்
மனத்தில் திடம் நாட்டவும்
இனி மனிதர்களையும்
காலத்தையும் நான் வேண்டிநிற்பது ஏன்?

வழிநெடுகவும் நிழல் பூத்திருக்குமென்ற
நப்பாசை எனக்கு.
கடினமிக்க பயணங்களில்
எந்த வகையிலும் உதவாதவன் நான்.
போதாக்குறைக்கு
அக்கரைப் பச்சைகளையும்
வண்ணத்துப் பூச்சிக்கனவுகளையும்
இரசிக்கும் மனோபாவம் வேறு.

முளைத்துக் கொண்டிருக்கும் எதிர்காலமே!
என்னையுன் புறங்காலால் தள்ளிவிடு.
எனது ஆதாரங்களை
சுவீகரித்துக்கொள்
என்திராணியற்ற கால்களை
உதாசீனம் செய்துவிட்டு
வலிமையுள்ள உன் கால்களை
உருவாக்கு.

உன் குதிரையேற்றத்தை நிகழ்த்து
உன் அணிவகுப்பை நிகழ்த்து
உன் மாபெரும் போரை நிகழ்த்து
இவற்றுக்காக
என் அழுக்குப் படிந்த தோல்
உதவுமெனில் உரித்தெடு
அதையும்,
ஒரு சேணம், ஒரு பாதணி
போன்றவற்றிற்காக.
வாட்களையும் கேடயங்களையும்
நீயே தயார் செய்து கொள்!
கோபமும் வீரமும் வேண்டும்
அவற்றுக்கு.

*திருநகஸுர் ஜெகா*



படிப்பகம்

www.padippakam.com



## காலம்

ஆறுகள் இருந்த
அடையாளமாய்
சில தடங்கள்
உடைந்த கிளிஞ்சல்களைப்
பொறுக்க ஓடுவோம்
சண்டையிட்டுக்கொண்டு—
தெற்குத்தெரு ரங்கன்
மரமேறுவதில் கில்லாடி
வசமான கிளையில்
உட்கார்ந்து கொண்டு
பழுத்த பழங்களைக்
கடித்து ருசித்து
கொட்டைகளை
எறிவான் எங்கள் மேல்—
இனம் புரியா நோய் வந்து
அவன் இறந்த போது
பகை மறந்து
அழுது தீர்த்தோம்
இரண்டு நாள் —
மரமிருந்த சுவடும்
மறைந்து போச்சு —
ஊருணியில்
பளிங்கு நீரை மண்குடம்
ததும்ப சுமந்து
வரும் பெண் வரிசை
காணாமல் போயிற்று —
இருட்டு பிரியும் முன்
தூண்டிலோடு திரும்பும்
மீசைத் தாத்தா
'போங்கடா பாப்பாரப்
பசங்களா —'
என்று விரட்டுவார் தவறாமல் —
அழகிய மீன்களை
நாங்கள் பார்த்தால்
பாவம் அவருக்காகவும்
அவரில்லா விட்டாலும்
அவர் உட்கார்ந்திருந்த
திண்ணை இன்றுவரை
இருக்கிறது அதிஷ்டம் தான்—
எத்தனை நாளைக்கு
இவையெனத்
தெரியாவிட்டாலும்
நினைப்பில்
நிஜம் தேடக்கற்றால்
இன்னொரு நூற்றாண்டை
கழித்து விடலாம்
சிரமமின்றி.

*நா.விச்வநாதன்*

## அழிவு காலத் தேவதைத் தாண்டவம்

சாவெழுதிப்போன
புல்லாங்குழலின் துளைகள்
உதிர்ந்து கிடந்தன.
வீணையின் நரம்புகள்
அறுபட்டுப்போயின.
அவள் தன்னை
அலங்கரித்தபடியிருந்தாள்.
மிருதங்கத்தின்
தோல்கள் கிழிந்து கிடந்தன.
குயில்களின் குரல்கள் கரகரத்துப்போயின.
அவள் தேனைப் பருகியபடியிருந்தாள்.
மத்தளங்கள் சுதிமாறி ஒலித்துக்கொண்டிருந்தன.
அவள் பரதநாட்டியத்திற்கு
ஆயத்தமாகிக்கொண்டிருக்கிறாள்.
அவளது ஒவ்வொரு
அங்க அசைவிலும் மரணங்களும் ஓலங்களுமே
இடையின்றித் தொடர்கின்றன.
பாவ, ராக, தாளங்களை தனக்கேற்றபடி
மாற்றுகிறாள்.
பரதநாட்டியம் அவளால்
நிர்வாணப்படுத்தப்பட்டுக் கொண்டே இருக்கிறது.

*யாத்திரிகன்*



படிப்பகம்

www.padippakam.com



## "மையல்"

வெட்ட வெளியிடை
சிறு சுட்டித் தீபமொன்றின்
பதைக்கின்ற சுடராய்
அணைக்கின்ற பாவனையில் மனதலைத்து
ரசிக்க என்ன இருக்கிறது
என் பதைப்பில்.
கண்ணீரை ருசிக்கும்
ராட்சஷ மனமில்லையே உனக்கு.

இரத்தமாய் முகஞ்சிவந்து
உதடு துடிக்கப் புலம்புவேன்.
கோபத்திலும், நான் அழகென்பாய்
என் பலவீனப் புள்ளிகள் பார்த்து
பூக்களால் அடிப்பாய்.
பூக்களை மலர்த்தி
மகரந்தத் தேனடையில் மனந்தோய
மையல் பெருக்குவாய்.

பூப்பூவாய் பூத்த உன்
மர்மப் பூக்களில்
மோதித் தடுமாறுகின்றன
குருட்டு வௌவாலாய்
பசித்த புலன்கள்

எஸ். உமாஜிப்ரான்

## "கருணைக்குருதி"

சக உயிரின்
சிறுவலியும் தாளாது
பொசுக்கென்று நீர்துளிர்க்கும்
மிருதுமனங்களின்
முள்ளணிந்த இதயம்
முத்து முத்தாய் துளிர்க்கும்
ஒவ்வொரு துளிகுருதியிலும்
பூப்பூவாய்
கருணை பூக்கலாயிற்று.
(கொய்து, மனஞ்சூடினோம்)
பூக்களின் பரிவில்
பொன்துகளின் புன்னகை
மின்னலாயிற்று முகங்களில்.

கருணைக்குருதி
மொத்தமும் தெறிக்க
தேகங்கள் மரிக்கின்றன.
தேகங்களே மரிக்கின்றன.
உலவும் மனிதரில்
உயிரின் சலனம்
மனஞ்சூடிய பூக்களே:

*"மொழியியலைப் பொறுத்தவரை ஒரு இலக்கியப் படைப்பு 'வெறும்' பிரதியல்ல. அது ஒரு இலக்கியப் பிரதி அதற்கென்று சில விசேட பண்புகள் உண்டு. அவை கவித்துவ அல்லது அழகியல் பண்புகளாகும். மொழியின் சில செயற்பாடுகள் இப் பண்புகளைத் தீர்மானிக்கின்றன. "*

**"கவிதையியல் துறையில் மொழியியலின் ஆற்றலைச் சந்தேகிக்கும் திறனாய்வாளர் யாரும் இருப்பார்களேயானால், சில மொழியியலாளர்களின் கவித்துவத் திறன் இன்மை மொழியியல் விஞ்ஞானத்தின் போதாமையாக அவர்களால் தவறான விளங்கிக் கொள்ளப்பட்டுள்ளது என்றே நான் கருதுகிறேன். மொழியின் கவித்துவச் செயற்பாட்டுக்குச் செவிசாய்க்க முடியாத ஒரு மொழியியல் செவிடரும், மொழியியல் பிரச்சினைகள் பற்றிய அக்கறையற்ற, மொழியியல் ஆய்வு முறையில் தேர்ச்சியற்ற ஒரு இலக்கியப் புலமையாளரும் வெட்கமற்ற காலமுரண்கள் என்பதில் ஐயமில்லை."**

*மொழியியலும் இலக்கியத் திறனாய்வும்*
*-நன்றி காலச்சுவடு இதழ்38*



படிப்பகம்

www.padippakam.com





## யௌவனத்தை மூடிய காலம்

அநாமிகா—
பொழிகின்ற ஊசிகளால்
போர்க்கப்பட்ட யௌவனம்.
அதனுள்
அமிழ்ந்தும், எழுந்தும்
நிலவைச் சபித்தும்
தென்றலை எரித்தும்
நிம்மதிகாணத் தவிக்கும்
என் இனிய நெஞ்சம்.

விழிகள் மிளிர்த்தும்
தரிசனத்தையும்,
நரம்புகள் சிலிர்க்கும்
ஸ்பரிசத்தையும்,
யாசிக்கும் ஜீவனுக்காய்
எனது
ஆத்மாவின் வலிர்தல் நீள்கிறது
எரியும் தேசத்திலிருந்து....

என் பிரிய வசந்தமே,
அடீ...
நிகழுமென் வாழ்வியக் கத்தில்
நீ... நீயே
ஒரு கவிஞனின்
எழுதுகோலாயிருப்பதிலும்
ஒரு போர் வீரனின்
துப்பாக்கியாயிருப்பதிலும்
இன்புற்றுக் கொள்கிறது நெஞ்சம்.

அநாமிகா,
கனவுகளுடனும்,
காத்திருப்புகளுடனும்
காதலியாயும் இருந்து விடு.

*அநாமிகன்*

## எம்மண்ணின் இந்நாட்கள் அல்லது இரு பரிமாணங்கள்

நிலவு மறைந்த இரவு
சூழ்ந்திருந்த புல்வெளியின்
இடுப்புயரப் புல்நுனிகள்
சூடிய பனித்துளியை மனமுணரும்,
பசும்பாயின் மேல்விரித்த வெண்துகிலாய்.
குடை விரித்த 'ஆச்சி'யின் கீழ்
போட்டிருந்த சிறு குடிலுள்
தென்னோலை மேற்கிடக்கும் நண்பர்கள்
சென்றியிலே நான்
ஊசியாய்த் தோல்புகும் பனி
'சுகமாய்த் தழுவும்' உடலை
பார்வையிலோ
தூரத்தே உச்சியிலே பனிமுகர்ந்த காடும்
அதன் வேரளைந்து ஓடும் சிற்றாறும்
இவையூடே வரக்கூடும் 'அவனும்:'
கண்தெரியா இருளெனினும்
தெரியுமென் மனதுக்கு—
வீடுவரும் என்நினைவில்
ஊர் உறங்கும் பிள்ளைகளும் அவளுங்கூடு!

*பு.சிந்துஜன்*

"படிமங்களினூடுதான் கவிதையின் பொருள் வெளியீடு நிகழ்கிறதெனினும் படிமங்களே கவிதையாகா. ஏதேனும் ஒன்று பற்றி கதைப்பின்னல் இல்லாமலும், தருக்க ரீதியான கட்டுரைத் தன்மை இல்லாமலும், உணர்வின் எழுச்சியாகவோ நிகழ்ச்சிப் படையலாகவோ குறியீட்டு விளக்கமாகவோ ஓசைக்கோப்போடும் படிமச் செறிவோடும் வடிவம் பெறும் மொழியாக்கமே கவிதை எனப்படும்"

தமிழ் புத்தகம் ஆண்டு 09



படிப்பகம்

www.padippakam.com



## காடுகள் அழித்து, முளைத்த குடில்கள்

I

சூரியனும்! ஒளிவிரல்களை நுளைக்க
சங்கடப்பட்டிருக்கும்.....
வானுயர வளர்ந்து
நிழற்குடை விரித்திருக்கும்
அடர்வனமான
யானை குட்டிபோடவும்
மெத்தை குளைகளால் வனைந்திருக்கும்
சிறுத்தையுடன்
வேறு மிருகங்களும்
வாழ்ந்து களிப்புற்றிருக்கும்
முன்பொருகாலம்.

II

கடுகளவு
முகடு சுமந்த குடிசை
துணிவும்.....! குப்பி விளக்குமே துணை
என் வாழ்வு நடக்கிறது
பையப் பைய......
பித்த வெடிப்புக் காரனைப் போல...
இரு பக்கமும்
சிறு பற்றைகள் சடைத்திருக்க
நடுவாகச் செல்கிறது
எனது வீடு நோக்கி?
பாதங்களின் மிதியில்
புற்கள் அழிந்த
ஒற்றையடிப் பாதை!
மிக... மிக... தெளிவாகவும்....
வெண்மையாகவும்
என் தேசத்தில் நான் வைத்திருக்கும்
நேசிப்பைப் போல.....

*ஆவாரங்கால் சுதன்*

## அழிந்த கடலின் பழைய ஞாபகம்

வெண்நதி உதிர்ந்து கொண்டிருக்கிறது

I

குதிரைகளின்
குளம்படியோசையில் எழும்
கழியும் காலத்தின்
தீனக்குரலைக் கேட்டு
அழும்பறவை திடுக்குறுகிறது,
நாலாம் ஜாமத்தில்
எரிந்துபோன தன் கனவுகளின்
சாம்பலிலிருந்து
ஒரு புற்செடி முளைத்து வீடான
யதார்த்தம் பார்த்து.

II

கடலில் கதறும்
மீன்களின் குரலை
கேட்டுக் கொண்டேயிருக்கும்
நாரைகளின் முகத்தில்
பூக்கள் விரிகின்றன.

III

கடலின் ஓசையில்
மூழும் தீராத் துயரொலிப் பிரவாகம்
அனல் மூட்டிப் போகிறது
எங்கும்.

வெண் நதி உதிர்ந்து கொண்டேயிருக்கிறது

*கருணாகரன்*

---

"சாதாரண மொழியை விட கவிதை மொழி அதிக பொருளை உணர்த்தும் ஆற்றல் வாய்ந்தது. அது நம் செவிக்கு இன்பம் தருகிறது. அதன் ஒலியினால் நாம் மகிழ்ச்சியும் கிளர்ச்சியும் அடைகிறோம். வசீகரிக்கப் படுகிறோம். எங்களுடைய புலன்களைக் கூர்மையடையச் செய்து நாம் நேரில் காணாதவற்றையும்– கற்பனை மூலம்– காணவைக்கிறது. இத்தனைக்கும் மேலாக நம் மனங்களை ஆட்கொண்டு எம்மைச் சிந்திக்கவும் உணரவும் வைக்கிறது."

–ஹான்ஸ் பி. கத்

---



படிப்பகம்

www.padippakam.com



## உயிர்ப்பின் ஒலி

வாழ்வின் ஆழத்தை வியக்கும் ரேகைத்தனமாய்
எம்முகவரிகள் வேர்நிறைத்தன.
வாழ்வின் பதிவுகளுடன்
எண்ண அடுக்குகளில் மாட்டிக்கொண்டு
உசாவும் உறவுக் கிளையாய்
சாவரை தழைக்கும் மண்ணின் நினைப்பு.

மண்ணின் நினைப்பு
சொந்தங்களைச் சுமந்ததால்
சுகித்திருந்தது பூரிப்பாய்.
முலையூறி விம்மும் தாய்மையாய்.
மூண்ட நினைவுகளுடன் முட்டிக்கொண்டு
பாசங்களைச் சுமக்கும்
பிஞ்சுகளாய் நாமன்று
தளர் நடையிட்ட தாய்மேனி.

தாய்மேனியின் உயிர்நாடி
ஓடுமுடல் எங்களது
புதையும் மணலில் பாவித்திரிந்த பாதங்களுடன்
கதைபேசிக் காத்திருந்த கரைவெளி
எல்லாம் எங்களது.

எங்களது சுரண்டப்படும் நினைவுகளால்
துன்பங்களாய்க் கரைந்தன பொழுதுகள்

ஆசை பொதிந்த மண்ணுக்காய்
உயிர்ப்பை பொளியும் வெளிக்காய்
ஆவி கலந்து உப்புக் காற்றுடன்
அசையும் எம்முயிர்க் கணுக்களின் கனவிது

கனவின்வெளிகள் திரையின்றித் தூலமாய்..
வரியும் பொழுதுகள் நம்மண்ணிலும் படிந்தன.

முழங்கிய சங்க நாதத்தின் ஒலி
முடியாமல் அலையாய் நீண்டிங்கு
வெம்பித்தகித்த வெளியெங்கும்
உயிர்ப்பாய் ஒலித்தது.

மீண்டும்
புதையும் மணலில் பாவித்திரியும் பாதங்களுடன்
கதை பேசிக் களித்திருப்போம்.

*ந.மயூரரூபன்*

---

"நவீன கவிஞன் கவிதைகள் வழியாக கலாசார நாகரிகங்களையே உருவாக்கி வருகிறான் "

-சுந்தரராமசாமி

---

## என் பள்ளிக்கூடம் பற்றிய சிறுகுறிப்பு

சருகுகள் நிறைந்த
சவக்காலையாய் நீண்டு கிடக்கிறது
காலடிகள் வற்றிய என் பள்ளிக்கூடம்

சொற்கள் பெருகி சுவர்களில் தெறித்த
புன்னகைகள் எல்லாவற்றையும்
தொலைத்து விட்டு
பிய்ந்து தூங்குகிறது
வெம்மை தின்ற கூரை முகடுகள்

வெண்கட்டிகள் பற்றிய
கைகளின் வேர்களைக் காணாது
கறுப்புப் பலகைகள்
துக்கத்தில் தீய்கின்றன

சொற்கள் கலைக்க
ஒலிக்கும் மணி இடுக்குகளில்
வலைகள் பின்னிப் பின்னி
முட்டைகள் பெருக்குகின்றன சிலந்திகள்

நிழல்கள் முறிந்த
மரங்களின் கிளைகளில்
குயில்களின் துயர்கள் நீள்கின்றன

என் கால்களை
பள்ளி முற்றங்களில் படவிடாது தடுக்கும்
விரல்கள் ஒவ்வொன்றையும் முறித்து
என் விழிக்குழிக்குள் போட்டுக்
கொண்டிருக்கிறேன்
தீயை மூட்டுவதற்காய்.

*கருணை ரவி*



படிப்பகம்

www.padippakam.com



## மனசை நசித்த நீ

மழைவிட்ட பின்னுந் தாழ்வார விழிம்போரம்
துளிதுளிர்த்து விழும் சதங்கையொலி !
கரிமிருட்டை
மெழுகிவரும் இரவு !
மின்சாரம் அறுந்ததனால்
குளுமையினை மேனி இரசிக்க வரும் வளிமீரம்
'துளைத்த' இடம் தடவ
பசையாய் விரலிலொட்டும்
நுளம்பின் இறப்பு !
பரவிவரும் மௌனமணம் !

கண்மூடிச் சிலகணங்கள் கரைந்தேன்: சிறு
இரைச்சல்
கொண்டு மழை மீண்டும்
குதூகலமாய்ச் சிரித்திருக்க
மென்மையாக என்னுள் மிதந்துவந்து....
நினைவெல்லாம்
உன் பெருமை சொல்ல,
உன் பொருளோ டுன்பயனோடு,
உன் மகிமை கூற, உமிர்வாட,
எனைச் சூழ்ந்து
எரிமலைக் குழம்புருகிச் சுட்டதெனத்
துடிதுடித்தேன்.
எரிவினை
நீ வந்தணைக்கும் வரை...
எரிவின் தகிப்புகளை
பொறுத்திருப்ப தெவ்வாறு? புரியேன் !
புலம்புகின்றேன்.
நினைவில் ஒளிந்து கொண்டு நற்சமிக்ஞை காட்டாது
நினைவினிலேன் உலவுகிறாய் நிரந்தரமாய்?
கேட்கின்றேன்..
நசித்த நுளம்பாச்சு மனசு:
சொல்..... என்னுயிர்ப்பேன்?

*த.ஜெயசீலன்*

## சுயவிசாரம்

இயற்கை
ஐம்பத்தாறு மொழிகளில்
என்னோடு பேசிக் கொண்டிருக்கிறது
நான்
சூரியனின் மைந்தன்.
காதின் வழியே புறப்படுகிறது மின்
நானும் மின்.
கோடி தலைமுறைகளின் உமிர்ப்பில்
வாழ்ந்து கொண்டிருக்கிறது –
இந்த உலகம்....
நானே கருணன்
நான்தான் பார்த்தசாரதி.

*திசைவீரசிங்கம்*

## வண்ணத்துப் பூச்சிகளை முன்வைத்து...

சித்திரை மாதத்து
வண்ணத்துப் பூச்சிகள்
வலசைபோகும்
கதிர்காமத்திற்கு

லேடி மன்னிங் பிறிட்ஜ்
தரையெங்கும்
வண்ணத்துப்பூச்சி
முத்திரைகள்

சில
வெற்றியுடன்
காற்றில்...
புள்ளியாய்...

பாலம் விலக்கி
கடனீரேரி
கடக்கச்சொன்னதெது.

*கலாப் ஃபர்ஹதி*



படிப்பகம்

www.padippakam.com



"நமது கவிதை மொழியின் அடையாளம் இந்த மண்ணுக்குரியது. கவிதையின் மொழிபற்றிய நமது சிந்தனைகளில் தமிழகத்து மொழிப் பிரயோகத்தின் (குறிப்பாக அயல்மொழி ஆதிக்கத்திற்குட்பட்டதன்) செல்வாக்கு ஓங்குகிறது எனின் நமது மொழியின் ஆளுமை பற்றி நாம் நம்பிக்கை இழக்கத் தொடங்குகிறோம் என்றே சொல்ல வேண்டும்."

–சி.சிவசேகரம்

## ஆதரவு

என்னைச் சூழ நடப்பது என்ன?
வீட்டுக்குள்ளும் நெருக்கடி
"உழைச்சுப் போடு"
"கோயிலுக்குப் போ"
"அக்கம் பக்கம் பார்க்காதே"
"அமத்திக் கொண்டு போடுவாங்கள்"
"அளவோடு படி"
"அதிகம் ஆத்திரப்படாதே"
"ஆவலைக் கட்டுப்படுத்து"
"ஆசையை தணித்து வை"
வெளியிலும் என்னால் உலவமுடியவில்லை:
எங்கும் பழைய புளிச்சல்கள்.
வான வெளியிலும் மாசு

நிர்மலமான ஆகாயம்;
ஏகாந்தப் பெருவெளி;
மௌன நிஷ்டை;
தேடி அலைகிறேன்.
புல்லினுள் பூக்கும் புல்லிதழை,
சிட்டென்று பறக்கும் புள்ளினத்தை,
துள்ளியோடும் ஆட்டுக்குட்டியின் நிமிர்வை,
பள்ளி செல்லும் சிறாரின் முகப்பொலிவை,
என்னுள் தேக்கிவைத்து
அண்ட சராசரங்களும் அடங்கி நடுங்கும் வேளை
ஆதரவுபெற விழைவேன் – மன
ஆதரவு பெற விழைவேன்.

*கந்தையா ஸ்ரீகணேசன்.*

## புணர்தலற்ற பிறவிகள்

பல்முளைக்காப் பருவத்தின்
பரிதவிப்புகளின் வடுக்களினூடு சிந்தப்படும்
சத்தமிக்க பாடலாய் கிறுக்கப்படுகின்றன
என் – கவிதைக்கான வரிகள்!
நெஞ்சறையில் கருத்தரித்து சிசுக்களாய்
அலறித்துடித்து அவதரிக்கும் என்
கவிச்சிசுக்களுக்கு
அப்பாக்கள் பலபேராயினர்...
தாயாகிப் போனேன் நான் தனியாக...

வாழ்வின் வசந்தங்களைத் திருடிய துயர்ப்
பொழுதுகளும்
உறுமியபடி உலாவரும் துப்பாக்கிகளும்
நிஜங்களைத் தொலைத்து கனவுகளில்
கரையும் வாழ்வினவலங்களுமே எனப்பலபேர்
என் கருத்தரிப்புக்கு விந்தணுக்களை
நெஞ்சறையிற் செலுத்தி கவிச்சிசுக்களுக்கு
அப்பாக்களாயினர்....!

கவிச்சிசுக்களுக்கு வயிறு உப்பி,
புளிப்புண்டு, வாந்தியெடுக்க வேண்டிய
அவஸ்த்தைகளெதுவுமில்லை:
கர்ப்பிணியாயிருக்கப் பெண்ணேகடவள்
எனும் பிரசங்கித்தனங்களுமில்லை:
காலவரையறைகளெதுவுமில்லை
புணர்தலுக்கும் பிரசவித்தலுக்கும்....

உணர்வுகள் உருகி உருகி வழிய பிரவசத்தின்
அவஸ்த்தை மட்டுமே எல்லை மீறிக்கொதிக்கும்
ஜுவாலையாயச் சுடும்...
பின்பிறக்குமோர் கவிதைச்சிசு......

*பாலைநகர் ஜிஃப்ரி*




படிப்பகம்

www.padippakam.com



# பேசாப் பொருட்களைப் பேசிய ஈழத்துப் பெண் கவிஞர்கள்



சு.ஜெயச்சந்திரன்

## மரபுகளும் மீறல்களும்

கலாச்சார, சமூக விழுமியங்கள், மரபுகள், மதங்கள் முதலியன மனிதசுதந்திரத்திற்கு கட்டுப்பாடுகளை விதிக்கும் நடவடிக்கைகளையும், மூடநம்பிக்கைகளையும் ஏற்படுத்துகின்றன. இத்தகைய செயற்பாடுகளில் ஆண்கள் பல சந்தர்ப்பங்களில் தப்பிக் கொள்ளும் அதே வேளையில், பெண்கள் அக்கட்டுப்பாடுகளிலிருந்து விடுபட முடியாமல் வாழ வேண்டியுள்ளது. இதனால் ஒரு பெண் தனது சுதந்திரம், ஆசைகள், உணர்வுகள், முதலியவற்றை துறக்க வேண்டியுள்ளது. இத்தகைய செயற்பாட்டினால் வீட்டை விட்டு வெளியே போதல் என்பது தடை செய்யப்படுகின்றது. முக்கியமாக பருவமடைதல் என்ற சடங்கின் பின் பெண்ணுக்கான கட்டுப்பாடுகள் வீட்டில், சமூகத்தில் அதிகரிக்கின்றன. சங்கரியின் "இன்று நான் பெரிய பெண்" என்ற கவிதையில்:

"நான்
கல்லாய் மாறிய பூ
பாறையாய் இறுகிய காற்று
பனியாய் உறைந்த நீர்

-----------------

இன்று
நான் பெரிய பெண்.
உரத்துச்சிரித்தல் கூடாது,
விரித்த புகையிலை
அடக்கம்; பொறுமை;
நாணம்
பெண்மையின் அணிகலம்.
கதைத்தல்; சிரித்தல்;
பார்த்தல்; நடத்தல்;
உடுத்தல்
எல்லாம் இன்னபடி என்றெழுதி விடு----"

(சங்கரி.அ :சொல்லாத சேதிகள் :1986: பக்:4)

ஒரு பெண் இயற்கையின் நியதிப்படி பருவமடைகிறாள். அதனால் அவளின் தனிமனித சுதந்திரங்கள் மறுக்கப் படுகின்றன. இங்கு ஒரு பெண் கல், பாறை, பனி என பல்வேறு விதமாக அடக்கப்படுவதனைக் காணலாம். அவளின் சுதந்திரங்கள் பறிக்கப்பட்டு வீட்டுக்குள் அடைக்கப்படுகிறாள் என்பதை சங்கரி காட்டுகின்றார்.



படிப்பகம்

www.padippakam.com



மல்லிகாவின் "ஏனிந்த வித்தியாசங்கள்" என்ற நீண்ட கவிதையில்

"-----------------
தோழிகளோடு கூடியிருக்கவும்
வெளிக்கிணற்றினில் அள்ளிக் குளிக்கவும்
இனி எனக்கு விலக்கப்பட்டுள்ளதாம்
நான் இனி வளர்ந்த பெண்ணாம்"

(மல்லிகா: தூண்டில்: 50 மார்ச்சு 1992 : பக்:13)

தம்பி அடித்தால் வாய்மூடி மௌனியாக இருக்கவேண்டிய நிலையில் பெண்கள் வீட்டுக்குள் அடக்கப்படுவதனை அவதானிக்கலாம். வீட்டுக்குள் அடக்கப்பட்ட ஒரு பெண்ணின் உள்ளத்துக் குமுறல்களை நிருபாவின் "அம்மாவும் நானும்" என்ற கவிதையில் வீட்டை விட்டு வெளியே வரத்துடிக்கின்ற பெண்ணைக் காட்டுகிறார்.

இங்கு சமூக அமைப்பு முறையை வெறுப்பதைக் காணலாம். அவளின் குரல் ஒரு ஆத்மாவின் உள்ளுணர்வின் வெளிப்பாடாகவே காட்டப்படுகின்றது. தாய் அடங்கி அடிமையாக வாழ்ந்தாள் என்பதற்காக மகளும் அவ்வாறே வாழ வேண்டுமென்பதில்லை.

ஊர்வசியின் "வேலி" எனும் கவிதையில் பெண்களுக்கு வீடு என்பது சிறையாகவே காணப்படுகின்றது. ஆண்களைப் போல வெளியே போகச் சுதந்திரம் இல்லை. சாளரத்தின் ஊடேதான் வெளியுலகை நோக்குகின்றாள். தினமும் அவளின் கண்ணில் படுவதெல்லாம் பல்லிகள், பறவைகள், ஜன்னல், ஒட்டடைகள் இதனைத்தவிர வேறு எதுவுமில்லை.

"நட்சத்திரப் பூக்களை
எண்ண முடியாமல்
மேலே கவிழ்ந்தபடி கூரை
ஒட்டடைகள் படிந்து
கறுப்பாய் போனது
கம்பி போட்ட சாளரம் கூட
உயரமாய்
-----------------
எப்போது தான் என்னால்
நீ வசிக்கின்ற அந்த
திறந்த வெளிக்கு வர முடியும்?"

(ஊர்வசி: சொல்லாத சேதிகள்: 1986பக். 55)

பெண்கள் வெளியே போதல் தடை செய்யப்பட்ட காலத்தின் நிலை இது. அவ்வாறு வெளியே சென்றால் அவள் மீது பல்வேறு வசைமொழிகள் தூவப்படும். ஆயினும் பெண் கவிஞர்கள் வீட்டை சிறையாகவும் அது பெண்களுக்கு ஓர் அடிமை இடம் என்றும் அதனை விட்டு வெளியே புறப்படல் வேண்டும் என்றும் தமது கவிதைகளில் குறிப்பிட்டுள்ளனர். பாமினியின் "வெளியே வா", "புறப்பட்டு வா" முதலிய கவிதைகளும் இத்தன்மை கொண்டவையே. இதில் பெண்களுக்கு வீடு மட்டும் உலகமல்ல அதைவிட சுதந்திரமாக நடமாட வேண்டிய இடமுண்டு என்கிறார். வானதி, கஸ்தூரி முதலிய கவிஞர்களும் "புறப்பட்டு வா" என்ற தலைப்பில் எழுதியுள்ளனர். பாமினியின் "பிரகடனம்" என்ற கவிதையில் காலத்துக்குக் காலம் பெண்களுக்கு நடாத்தப்படும் விழாக்கள் பற்றி கிண்டல் செய்கின்ற தன்மையினை அவதானிக்கலாம்.

"சித்திரவதையின்
தொடக்க விழா
முப்பதாம் நாளில்
ஆரம்பம்
துளைத்துப் பூட்டியும்
பன்னிரண்டை நான்
தாண்டுகையில்
உற்பத்திக்குப்
புதிய இயந்திரம்
தயார் என்கின்ற
விளம்பர நீராட்டு விழா
-----------------
காரணமின்றி என்மீது
தொடரப்பட்ட
வன்முறைகள்
அவள் மீதும்
தொடரப்பட்ட நான்
அனுமதிக்கப் போவதில்லை"

(பாமினி: பெண்கள் சந்திப்பு மலர்: 1992)

இவ்வரிகளில் சடங்குகள், சம்பிரதாயங்கள், மூடநம்பிக்கைகளுக்கு எதிர்ப்புக் காட்டும் அதேவேளை இவை தனக்கு ஏற்பட்டது போல் தன் மகளுக்கு ஏற்படக்கூடாது என்பததை, ஆணித்தரமாக உரைப்பதை அவதானிக்கலாம். ஒரு பெண் இவற்றை "முறை"யாகவே காணுகிறாள். இன்று அத்தகைய தடைகளை உடைத்து வெளியே வர எத்தனிப்பதைக் காணலாம்.

பெண் கவிஞர்களின் கவிதைகளில் அன்றாடவாழ்வின் அனுபவங்கள், பிரச்சினைகள், அவலங்கள், பெண்கள்



படிப்பகம்

www.padippakam.com



மீதான அடக்கு முறைகள் முதலியன மட்டுமின்றி, தமது சமூகத்தில் வாழ்கின்ற, புலம்பெயர் இடங்களில் காணுகின்ற, அனுபவித்த பிரச்சினைகள், இனவாதம் அதனை ஒட்டிய தமிழர் பிரச்சனை, அதனால் ஏற்பட்ட யுத்த நெருக்கடிகள், புகலிடங்களில் ஏற்பட்டுள்ள நிறவாதம் முதலியவெல்லாம் பெண் கவிஞர்களின் கவிதைக் கருப்பொருளாகயுள்ளதை அவதானிக்கலாம். இவற்றைப் பொதுப் பிரச்சினைகள் எனலாம்.

நிறவாதம் என்பது மேற்குலக நாடுகளில் பாதுாரமான பிரச்சினைகளில் ஒன்று. கறுப்பினத்தவர்கள் மீது வெள்ளையர்கள் தமது ஆதிக்கத்தினை செலுத்த முனைவதேயாகும். இது ஆபிரிக்க, இலத்தீன் அமெரிக்க நாடுகளில் பாரிய பிரச்சனையாக மாறி வருகின்றது. ஈழத் தமிழர்கள் 1980களின் முன் உயர் கல்வி கற்கவும், உயர் தொழில் பெறவும், வேலைவாய்ப்புகளுக்காகவுமே புலம் பெயர்ந்தனர். எண்பதுகளின் பின் அரசியல் தஞ்சம், நாட்டின் அமைதியின்மை காரணமாகத் தனியாகவும், குடும்பமாகவும் ஐரோப்பிய நாடுகளுக்கும், அமெரிக்கா, அவுஸ்திரேலியா, கனடா முதலிய நாடுகளுக்கும் புலம் பெயர்ந்தனர். ஈழத்தமிழரும் கறுப்புத்தோல் உடையவராக இருப்பதனால் ஏற்கனவே மேற்குலக நாடுகளில் காணப்படுகின்ற நிற அடிப்டையான வேறுபாடுகள் ஈழத்தமிழர்கள் மத்தியிலும் அதிருப்தியையும், விரக்தியையும் ஏற்படுத்தின.

"நீக்ரோ" என அழைக்கப்பட்ட கறுப்பினத்தவரைப் போல் ஈழத் தமிழர்களை அழைக்கும் நிலை ஏற்பட்டது. இதனால் கொலை, பயமுறுத்தல் என்பனவும் ஈழத்தமிழர்களுக்கு புது அனுபவங்களாயின. புகலிடங்களில் வாழ்கின்ற ஈழத்துப் பெண்கவிஞர்களின் கவிதைகளில் நிறவாதக் கருத்துக்கள் வெளிப்படுவதனை அவதானிக்கலாம். நிருபாவின் "அப்பிள் மரத்தடியில் மாங்காய்களைத் தேடி" என்ற கவிதையில்:

"அகதி என்று
அத்தாட்சி பத்திரத்தோடு
ஐரோப்பிய வாசலில்------
ஜனநாயக நாட்டில்
சுதந்திர மனிதன்!
தமிழ் பேசி
கவி பாடி
கருத்துகள் கக்கிய
உதடுகள்
முரண்பாடு கொண்டு
சிக்கித் தவிக்கின்றன.
சிந்தனையும் தான்
ஏன் இங்கு வந்தாய்?
எட்டி நில் கறுப்பனே
வெண்முகங்கள்
விட்டெறியும்
ஏளனப் பார்வையில்
தலை குனியும் மௌனமாய்
---------------"

(நிருபா: நமது குரல்: சித்திரை1991: பக்.16)

இவ்வரிகள் மூலம் ஈழத்தமிழர்களுக்கு "அகதி" என்ற பட்டத்துடன் வசை மொழிகளையும் பெறவேண்டி ஏற்பட்டது. ஊரில் தலை நிமிர்ந்து வாழ்ந்தவன் வெளி நாட்டில் வெள்ளையன் முன்: தலை குனிந்து நிற்க வேண்டியேற்பட்டதை அவதானிக்கலாம். இதே போன்று புலம் பெயர்ந்த இடங்களில் பிள்ளைகள் கேட்கும் பலமான கேள்விகளுக்கு பதிலிறுக்க முடியாமல் திணறும் தமிழ்த் தாய், நிறவாதத்திற்கு அடிமையானதை காட்டுகின்றார்.

"-----------------
அம்மா
நாங்கள் ஏன் அகதிகளானோம்?
என் தாய் நாடு எங்கே?
என் தாய் மொழி எது?
நாங்கள் ஏன்
கறுப்பர்களாயிருக்கிறோம்?
"அவர்களால்" ஏன்
ஒதுக்கப்படுகின்றோம்?
துருக்கித் தோழி ஏன்
எரிக்கப்பட்டாள்.

(நிருபா: தேனீ: தை 1993பக்.4)

இங்கு ஒரு மனிதனின் உளவியல் பாதிப்புகள் காட்டப் படுகின்றன. தாய்நாட்டில் உரிமைகள், சுதந்திரங்கள் மறுக்கப்பட்டு அகதியாக ஐரோப்பிய வாசலில் வந்த போதும் நிலைமையில் மாற்றமில்லை: என்கிற போது வாழ்வில் விரக்தியும், வெறுமையும் அதனால் தற்கொலைகளும் ஏற்படுகின்றன. இங்கு "அவர்களால்" என்ற சொல் வெள்ளையரையே குறிக்கின்றதென்பது அவதானிக்கப்பட வேண்டியது.

தம்பாவின் "கரையேறும் தீவுகள்" எனும் கவிதையில் இனவாதத்திற்குப் பயந்து மேற்குலக நாடுகளில் அமைதி தேடி சுதந்திரத்தினை நாடி வந்த வேளையில் அங்கு



படிப்பகம்

www.padippakam.com



நிறவாதம் அடிமைப்படுத்துகிறதென்பதை:

"எங்ஙனம் சொல்வேன்
இனவாதமா? நிறவாதமா என்று
இனவாதத்திற்குத் தப்பி
எங்ஙனம் சொல்வேன்
அமைதி பூண்டேனென்று?
-----------------------"

(தம்பா: சக்தி: செப்டம்பர்1991:பக்.20)

இவ்வரிகளில் நிறவாதத்தினால் ஒரு மனிதன் மிருகத்துடன் கூட ஒப்பிட முடியாத நிலைக்குத் தள்ளப்படுகிறான். இவரின்" இனிக்கும் இரவும் புளிக்கும் பகலும்" என்ற கவிதையில்:

"போதை ஏறிய சனிநாள் ஒன்று
மாலை ஓர் ஐரோப்பிய வீதியில்
சொர்க்கம் காணும் வெண் மனிதர்கள்
-----------------------------
கற்றுக் கொள் கறுப்ப நாயே
சாகப்பிறந்த பன்றியே
தொழுவத்தைவிட்டு ஏன் வந்தாய் வெளியே?
கறுப்பு அழிந்தால் மட்டும்
புனிதமடையும் பூமி
------------------------"

(தம்பா: சுவடுகள்: ஏப்பிரல்1994:பக்.56)

இதில் நிறவாதத்தின் கொடுமையினால் ஈழத்தமிழர் கொலை செய்யப்படுவதையும், காயங்களுக்கு உள்ளாவதையும் வேண்டாத விருந்தாளிகள் போன்று அலட்சியப் படுத்துவதையும் அவதானிக்கலாம். தாய் நாட்டையும், அதன் நிலைமைகளையும் ஐரோப்பியர் கிண்டல் செய்வதை கவிஞர் உள்ளார்ந்த ரீதியாகக் காட்டுகின்றார்.

1956இல் இருந்து பெருந்தேசியவாதம் மெல்ல மெல்ல வளர்ந்து 1980களின் பின் சிறிலங்கா அரசினால் சிங்கள பௌத்த இனவாதமாக தூண்டி விடப்பட்டது. இத்தூண்டலின் பெறுபேறுதான் 1980களில் தமிழர்களின் துணைத்தேசியவாதம் யுத்த நெருக்கடிகளை ஏற்படுத்தியது. அதன் பின் ஆயுதப் போராட்டமாக உருவெடுத்தது.

"தேசிய ஒடுக்கு முறையின் இராணுவப் பயங்கரவாதம், ஆயுதப் போராட்டம், மரணம், இவ் வகையான இரத்தம் சிந்தும் அரசியலே இன்று எமது கவிதையின் பிரதான கூறாக அமைகின்றது. இவ்வகையில் அது தரும் சேதிகள், கிளர்த்தும் அனுபவங்கள், தொற்றவைக்கும் உணர்வுகள் தமிழ் இலக்கியத்தில் முற்றிலும் புதிய வாழ்நிலைகளை கொண்டு வருகின்றன"

(சேரன். உ:மரணத்துள் வாழ்வோம்:1985:பக்.ix)

இனவாதத்தின்வெளிப்பாடுகளை பெண் கவிஞர்களின் கவிதைகளூடேயும் காணலாம். ஈழத்திலும், புகலிடங் களிலும், வாழ்கின்ற கவிஞர்கள் இனவாதத்தின் கொடுமைகளையும் யுத்த நெருக்கடிகளையும் அகதி வாழ்க்கையினையும் வருங்காலச் சந்ததியின்சூனியமான வாழ்க்கை, அமைதியின்மை பற்றியும் கவிதையூடாக வெளிப்படுத்தியுள்ளனர். ஊர்வசியின் "இடையில் ஒரு நாள்" எனும் கவிதையில்:

"------------
இராணுவக் கும்பல்: அல்லது
பொலிஸ் படை
பிறகு
கூந்தல் அவிழ்ந்து விழுகிற வரையில்
விசாரணை
-------------"

(ஊர்வசி: மரணத்துள் வாழ்வோம்:1995:பக் ,99)

இவ்வரிகளில் ஆரம்ப காலங்களில் ஈழத்தில் விசாரணை என்ற பெயரில் நடந்த சித்திரவதையின் சாயல் தென்படுகின்றது. ஆண்கள் மட்டுமின்றி பெண்களும் ஈவிரக்கமின்றி தண்டிக்கப்பட்டனர். பாலியல் வன்முறைக்கும் பலாத்காரத்திற்கும் உள்ளாக்கப்பட்டனர். இதனை ஊர்வசியின் "அவர்களுடைய இரவு", "சிறையதிகாரிக்கு ஒரு விண்ணப்பம்" முதலிய கவிதைகளில் இனவாதத்தின் சொல்லணாத் துயர்களை படம் பிடித்துக் காட்டுவதை அவதானிக்கலாம்.

ஒருவன் கொல்லப்பட்ட பின் அவனை அடையாளம் கண்டும் அடையாளத்தை காட்டிக் கொள்ள முடியாமல் சஞ்சலப்படும் துர்ப்பாக்கிய நிலை இனவாத இராணுவக் கும்பல்களால் ஏற்பட்டது.

இனவாதம் எவ்வளவு தூரம் தமிழர்கள் மீதும் தமிழ்ப் பிரதேசங்கள் மீதும் தனது மனித உரிமை மீறல்களைச் செய்ததெனத் தெரிகிறது. யதார்த்தத்துடன் கருத்துக் களைக் கவிதையில் காட்டியுள்ளதுடன் அநீதி, துயரம், அழிவு என்பவற்றையும்; நியாயமே இல்லாதது பற்றியும், வசதி படைத்தவர்கள் வெளி நாடுகளுக்கும், தலைநகரங்க ளுக்கும் இடம் பெயர்ந்து போகையில்: ஏழைகள் யாது செய்தல் இயலும் என்பதை சன்மார்க்காவின் "ஒரு



படிப்பகம்

www.padippakam.com



தாயின் புலம்பல்'' என்ற கவிதை போட்டி நிற்கின்றது. வானதியின் ''தமிழீழப் பெண்ணிவள்'' என்ற கவிதையில் பெண்கள் எவ்வாறு இன்று யதார்த்தச் சூழலுக்குத் தங்களை பழக்கப்படுத்திக் கொண்டனர் என்பதையும், போராட்டங்களில் தங்களை எவ்வாறு இணைத்துக் கொள்கின்றனர் என்பதனையும் காட்டுகின்றார்.

''இவள் உதடுகள் உச்சரிப்பது
உபயோகமற்ற உளறல்களையல்ல
உதிர்ந்தவர்களின் உறுதிமொழிகளை
இவள் அணைத்துக் கொள்வது
ஆண்களையல்ல ஆயுதத்தை''

(வானதி: வானதி கவிதைகள்:1992பக்.17)

இவ்வரிகள் மூலம் தமிழ்ப் பெண்கள் மீது அவிழ்த்து விடப்பட்ட இனவாதத்தினால் அவளும் ஆயுதம் ஏந்த நிர்ப்பந்திக்கப்பட்டாள். இனவாதத்தின் கொடுமைகளிலும் அடக்கு முறைகளிலும் இருந்து சுதந்திரம், விடுதலை பெறவேண்டியதன் அவசியப்பாடு இவர்களின் கவிதைகளில் வலியுறுத்தப்படுவதை அவதானிக்கலாம். கஸ்தூரியின் ''சுதந்திரமே''என்ற கவிதையில்:

''சுதந்திரமே --
உன்னோடு
சொந்தம் கொண்டாடப்
புறப்பட்டதால்
சாவு இங்கே
சாதாரண விலைக்கு
வந்துவிட்டது''

(கஸ்தூரி: கஸ்தூரி ஆக்கங்கள்:1991பக்.25)

இவரின் ''ஒரு நாள் வெளி வரும்'', ''இறப்பற்றோர்'', ''கல்லறைக்குள் கதிரவன்'' முதலிய கவிதைகளிலும் இனவாதம் சித்திரித்துக் காட்டப்படுகின்றன. சிவரமணியின் பல கவிதைகளில் இனவாதம் சார்ந்த குறியீட்டுத்தன்மை உண்டு. சமூகத்தின் யதார்த்த நிகழ்வுகளுக்கு அரசியல் இரண்டறக் கலந்துள்ள தன்மையினை;

''இத்தனைக்கும் நடுவே
மக்கள் பார்வையில் நழுவிய
ஒரு சிறு கறுப்புக் கொடி
ஆனாலும் வழமை போல் திருவிழா
நடந்தது
மீண்டும் ஒருவன் வருவான்
இந்தக் கொடி கிழிந்திருக்கும்
இதற்குப்பதில்
இன்னுமோர் கறுப்புக் கொடி
ஏற்றி வைப்பான்

(சிவரமணி: சிவரமணி கவிதைகள்: 1993: பக்.02)

இங்கு இயல்பான கோவில் திருவிழாவுடன் இனவாதத்தால் கொல்லப்பட்ட மக்கள் நினைவாக கட்டப்பட்டிருக்கும் கறுப்புக் கொடியின் நினைவும் மீட்டப்படுகின்றது. இயல்பான சம்பவங்களுடன் மக்கள் பார்வையிலிருந்து விடுபட்ட ஒரு கறுப்புக் கொடி, மீண்டும் ஒரு நாள் இரத்தத்துளிகள் மண்ணிலே தெளிக்கப்படும் போது ஏற்றப்படும். ஆகவே இனவாதம், அரசியல், புரட்சி என்பன மக்கள் வாழ்க்கையுடன் பின்னிப்பிணைந்த ஒன்று என்பதை சிவரமணியின் கவிதைகள் காட்டுகின்றன. இவரின் ''யுத்தகால இரவொன்றின் நெருக்குதல்'' மூலம் இளம் சந்ததியினர் இனவாத யுத்தத்தால் எவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை,

''தும்பியின் இறக்கையைப் பிய்த்து எறிவதும்
தடியையும் பொல்லையும் துப்பாக்கியாக்கி
எதிரியாய் நினைத்து நண்பனைக் கொல்வதும்
எமது சிறுவரின் விளையாட்டானது
யுத்தகால இரவுகளின் நெருக்குதலில்
எங்கள் குழந்தைகள்
''வளர்ந்தவர் ஆயினர்''

(சிவரமணி: சிவரமணி கவிதைகள்: 1993:)

சுல்பிகாவின் ''போர் இரவுகளின் சாட்சிகள்'' என்ற கவிதையில் மானிடத்தின் மரணம் வெறும் வார்த்தைகளால் சொல்ல முடியாத அளவுக்குக் கேவலமானதாக மாறிவிட்டது. துப்பாக்கிகளே கதைக்கும் காலமாய் போயிற்று. மானுட நேயம் செத்து விட்டது என்கிறார். இனத்தின் பெயரால் இவை தூண்டிவிடப்பட்டுள்ளது.நாள் எல்லாம் கலக்கத்துடனும், பயத்துடனும் அமைதியிழந்து வாழவேண்டியுள்ளது என்பதைக் காட்டுகின்றார்.

''இரும்புப் பறவைகள் வானில் பறக்க
பதுங்கு குழிகளில்
மனிதர்கள் தவிக்க
தொடர்கிறது அந்த இரவு
மானிடத்தின் மரணத்திற்கு
இரத்தம் தோய்ந்த இந்த இரவுக் காட்சி
தெருச் சடலங்கள்
கற்பிழந்த பெண்கள்
கருகிச் சாய்ந்த குழந்தைச் சடலங்கள்
இடிந்த கட்டடங்கள்
குழி வெடித்து
காய்ந்து கிடக்கும் வயல்வெளிகள்
புத்தகச் சாம்பல்கள்
இன்னும் இன்னும் எத்தனை



படிப்பகம்

www.padippakam.com



இந்தப்பட்டியலில்----

(சுல்பிகா: விலங்கிடப்பட்ட மானுடம்:1995)

இவரின் பெரும்பாலான கவிதைகள் ஈழத்தில் இனவாதம் செய்த அழிவுகளின் நினைவுகளைப் படம் பிடித்துக் காட்டும் வண்ணம் அமைந்துள்ளன. நேரடி அனுபவம் அதனால் ஏற்பட்ட மனவிரக்தி என்பனவும் இவரது கவிதைகளில் காணலாம். மரினா இல்யாஸின் "அண்ணனுக்கு ஓர் அஞ்சலி" என்ற கவிதையில் வெளிநாட்டில் இருக்கும் சகோதரனுக்கு நாட்டின் இனவாதக் கொடுமைகளையும், அகதியாகி அலைவதையும் காட்டுகின்றனர்.

நீ நீந்தி விளையாடிய
நீல ஆறு இப்போது
சிவப்பாக ஓடிக் கொண்டிருக்கிறது.
அதிலுள்ள மீன்களெல்லாம்
மனிதப் பிண்டங்களைச் சாப்பிட்டு
சந்தோஷமாக இருக்கின்றன!
--------------
விடிந்ததும்
கதவைத் திறந்தால்
வாசலை அலங்கரிப்பது
கோலமல்ல பிணங்கள்!
இன்னும் கொஞ்ச நாளில்
இங்கே இருக்கும் ஒவ்வொரு கல்வீடும்
ஒவ்வொரு கல்லறையாய் மாறிவிடலாம்.
இக்கடிதத்தைப் பார்த்துவிட்டு
உன் குடும்பத்திற்காக மட்டும்
கண்ணீர் வடிக்காதே
யுத்தத்தில்
செத்துக் கொண்டிருக்கும்
அப்பாவி மக்களுக்காகவும்
அழு-----------

(மரினா இல்யாஸ்: இளங்கதிர்:1992)

இவ்வரிகளில் இன்றைய ஈழத்துத் தமிழ் மக்களின் உண்மை நிலையினையும், பொருளாதாரம் சிதைந்து போவதையும், முகவரியில்லாது போகுமளவிற்கு இனவாதத்தின் அதிகாரமற்ற இராணுவக் கொடுமைகள் காட்டப் படுகின்றன. பாரதியின் "விடிவிற்காய் எழுவோம்" என்ற கவிதையிலும் யுத்தத்தால்; வளர்ந்தவர்கள் மட்டுமல்லாது பிஞ்சுக்குழந்தைகள், பள்ளி மாணவர்கள் என்று சகலரும் பாதிக்கப்படுவதைக் காட்டுகின்றார். விமானத்தாக்குதல்களால் சின்னாபின்னப் பட்டுப்போன பாடசாலைகள், கோயில்கள், பொருளாதார வளங்கள் பற்றிய கவிதைகளும் உண்டு. குறிப்பாக மல்லிகா, உதயலட்சுமி, ஆதிலட்சுமி ஆகியோரின் கவிதைகளில் விமானத்தாக்குதலின் அட்டூழியங்கள் சித்திரிக்கப்பட்டுள்ளன. இது ஈழத்துக்கவிதைப் பரப்பில் புதிய பரிமாணத்தினை ஏற்படுத்தியுள்ளது.

90களில் வெளிவந்த கவிதைத்தொகுதிகளிலும் கவிதைகளிலும் பல்வேறு பொது விடயங்களையும் பேசத்தலைப் பட்டுள்ளனர். பெண்களின் கவிதைகளில் சர்வதேச அமைப்புகள், சிசுக்கொலை, விடுதலை பெற்ற நாடுகளை வாழ்த்துதல், வல்லரசுகளைக் கிண்டல் செய்தல், போன்றவை பாடுபொருளாகின்றன. பாரதியின் "சிதறிப்போன சிகப்பு வல்லரசு" சோவியத் நாடு பிளவு பட்டு சிறுசிறு சுதந்திர நாடுகளாகப் பிரிந்து போனதை எழுதிய கவிதை,

"ஐ. நா. சபையில்
நேற்று
இரவோடு இரவாக
உன் கொடியும்
இறக்கப்பட்டதாமே?....

(பாரதி: காதோடு சொல்லி விடு: 1992: பக்கம் 22)

இங்கு வல்லரசு என்ற பெயரில் உள்ள ஐந்து நாடுகளில் ஒன்று இல்லாது உடைந்து பிளவுபட்டுப் போனதையிட்டு ஐக்கிய நாடுகள் சந்தோசம் பாடும், என்று கிண்டல் செய்வது போல் உள்ளது இக்கவிதையில்,

"உன்
பெரிய தேசம்
விடுவிக்கப்பட்ட போது
வீழ்ந்த வீரர்
சிந்திய இரத்தத்தால்
சிவந்த கொடியல்லவா அது....?"

என்று சிறப்பித்துக் காட்டுகிறார். சோவியத்யூனியன் கூட்டாக இருந்தபோது அது நடாத்திய யுத்தங்களையும் அதனால் மக்கள் அனுபவித்த துயரங்களையும் கூறுவதாக அக்கவிதை தொடர்கிறது.

"ஆப்கானிஸ்தானில்
அணிவகுத்த உன்
டாங்கிகளுக்குள்
சிலந்திப் பூச்சிகள் போல
சிக்குண்ட
அப்பாவி உயிர்களின்
ஆன்மாவின் ஓலம்
எரித்திய மக்களுக்கு
உதவிக்கரம் நீட்டி



படிப்பகம்

www.padippakam.com



உறுதுணையாய் நின்ற நீ
உறு மீன் கிடைத்தவுடன்
உதவிக் கரத்தையல்ல
அதன்
உள்ளங்கையையும்
சேர்த்தறுத்த
உன்
சிறுமைத்தனம்
இன்னும் என் நினைவில்,...
சுருக்கிடப்பட்ட லெனினின் சிலையும்
அகற்றப்பட்ட அவரது உடலும்
மறைக்கப்பட்ட மாவீரர் கல்லறையும்
எரிக்கப்பட்ட புத்தகக் குவியல்களும்
அழிந்து போகக் கூடியவையல்லவே"

(பாரதி: காதோடு சொல்லி விடு: 1992: பக்கம் 24) என்ற வரிகளில் சோவியத்யூனியன் செய்த இராணுவ அடக்குமுறைகளையும் லெனின் எதிர்பார்த்த சம உரிமை அழிந்து போனதையும் காட்டுகிறார்.

ஈழத்துப் பெண் கவிஞர்களின் கவிதைகளில் ஆணாதிக்கம், சீதனம், வீட்டை விட்டு வெளியே போதல் தடை செய்யப்பட்டமை, பருவமடைதலின் பின்னதான அடக்குமுறைகள் மற்றும் பொதுப்பிரச்சினைகளான நிறவாதம், இனவாதம்; அதன் கொடுமைகள் துன்பங்கள், அரசியல் நெருக்கடிகள், போராட்ட நிலைமைகள், காதல், உலக விவகாரங்கள் எனப் பல்வேறு வகைமிலும் அன்றாட மனித வாழ்வின் துயரங்களும் அகதி வாழ்வின் துன்பங்களும் பெண்கவிஞர்களின் கருப்பொருளாக மாறி வந்திருப்பதை அவதானிக்கலாம்.

"தூக்கியெறிய முடியாத கேள்விகளாய்" எம் முன் இக் கவிதைகள் பிரசன்னமாகி இன்றைய ஈழத்துக் கவிதையிலும் பொதுத் தமிழ்க்கவிதையிலும் "பேசாப் பொருளை"ப்பற்றி பேசிய பெண்களை ஈழத்துக்கவிதை யதார்த்தத்திலும் காணலாம். ■

---

"இன்று நீங்கள் நெரித்து அழிக்கும் எங்கள்
குரலைக் காட்டிலும்
எங்கள் மௌனம்
அதிக வலிமை பெறும் காலம் வந்தே
தீரும்"

தூக்கு மேடையில் ஸ்பைஸ்
(சிக்காக்கோவின் மேதின வீரர்)

மொழியியல் நோக்கில் இலக்கியத்தை ஒரு மொழிக்கலை என வரையறுக்கலாம். வேறு எந்தக் கலை வடிவமும் மொழியை ஒரு ஆக்கக் கூறாக, ஊடகமாகக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை. சிற்பம், ஓவியம், நடனம், இசை, நாடகம், திரைப்படம் எதற்கும் மொழி ஒரு அத்தியாவசியக் கூறு அல்ல. ஆனால் மொழி இல்லாமல் இலக்கியம் இல்லை. மொழியே இலக்கியத்தின் ஊடகமாகும்.

மொழியை நாம் இலக்கியப் படைப்பிற்கு மட்டுமின்றி வேறு பல தேவைகளுக்கும் பயன்படுத்துகின்றோம்.
*அன்றாட உரையாடல், கடிதம், பத்திரிகைச் செய்தி, அறிவித்தல், விளம்பரம், விபரணக் கட்டுரை, ஆராய்ச்சிக்கட்டுரை, விகடத்துணுக்கு, கவிதை, சிறுகதை, நாவல்*
இவை எல்லாம் மொழிப்பிரதிகள் தான். இவற்றுள் சிலவற்றை இலக்கியம் என்றும் சிலவற்றை இலக்கியம் அல்ல என்றும் வேறு படுத்துகின்றோம். இவ்வேறுபாட்டின் அடிப்படை என்ன? கவிதை, சிறுகதை, நாவல் முதலியவற்றை இலக்கியம் என்றும் ஏனையவற்றை இலக்கியம் அல்ல என்றும் என்ன அடிப்படையில் வேறுபடுத்துகின்றோம்? எல்லாமே மொழிப்பிரதிகள் தானே! இவற்றுக்கிடையே வேறுபாடு உண்டா? அப்படியாயின் என்ன வேறுபாடு?

ஒரு மொழித்தகவலை ஒரு கலைப்படைப்பாக ஆக்குவது எது என்ற கேள்வியை றோமன் ஜகோப்சன் எழுப்புகிறார். கவிதை இயல், அடிப்படையில் இவ் வினா தொடர்பானதுதான் என்பது அவரது கருத்து. இது பற்றிய விசாரணை இலக்கியத் திறனாய்வையும் மொழியியலையும் ஒரு புள்ளியில் ஒன்றிணைக்கின்றது எனலாம்.

ஒரு படைப்பாளி தான் வாழும் மொழிச் சமூகத்தில் வழக்கிலுள்ள பொது மொழியையே பயன்படுத்துகின்றான். அவனுக்கென்று ஒரு தனி மொழியை அவன் உருவாக்கவோ பயன்படுத்தவோ முடியாது. அவ்வாறு பயன்படுத்தினால் அவனால் தன் படைப்பு மூலம் அந்த மொழிச் சமூகத்துடன் தொடர்பு கொள்ள முடியாது. ஆயினும், பொது மொழியை ஊடகமாகக் கொண்டு அவன் படைக்கும் இலக்கியம், இலக்கியம் அல்லாத பிற மொழி பிரதிகளில் இருந்து வேறுபடுகிறது. நாம் இந்த வேறுபாட்டை உணர்கின்றோம். இந்த வேறுபாட்டின் அடிப்படை எது?

இலக்கியம் என்பது உணர்ச்சி மொழி அல்லது அணி மொழி என்று பொதுவாகக் கூறப்படுகின்றது. உவமை, உருவகம், குறியீடு, யாப்பு, சந்தம் (எதுகை, மோனை) இவை இலக்கிய மொழிக்கு உரியவை, குறிப்பாக கவிதைக்குரியவை என்று பேசுகிறோம். ஆனால், இவை நமது சாதாரண, இலக்கியமல்லாத மொழிப் பயன்பாட்டிலும் இடம்பெறுகின்றன. வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை விளம்பரங்களின் மொழியை சற்று நோக்கினால் இத்தகைய கூறுகள் பலவற்றைக் காணலாம். அரசியல் ஊர்வலங்களில் எழுப்பப்படும் கோசங்களில் நாம் இவற்றைக் காணலாம். நமது அன்றாட உரையாடலில் நாம் இத்தகைய கூறுகளை ஏராளமாகக் காணலாம். 'பெத்த வயிறு பத்தி எரியுது' என்ற ஒரு தாயின் கூற்று அணி மொழி தான்.

ஒரு இலக்கியப் படைப்பாளி பொது மொழியையே தன் படைப்புக்குப் பயன்படுத்துகிறான். எனினும், அந்த மொழி அமைப்பின் சாததியப் பாடுகளை உச்ச அளவில் பயன்படுத்தி அந்த மொழியின் மூலம் பிறிதொரு மொழியை உருவாக்குகிறான். அவ்வகையில் ஒரு இலக்கியப் படைப்பு மொழியினால் ஆன மொழி எனலாம்.

*எம்.ஏ.நுஃமான்*
*-நன்றி காலச்சுவடு இதழ்38*



படிப்பகம்

## சூரியனைக் கவர்ந்து சென்ற மிருகம்

என் அன்புக்கினிய தோழர்களே
எனது காதலியிடம் சொல்லுங்கள்,
ஆயிரக்கணக்கில் மனிதர்கள் குழுமியிருந்த
வனாந்தரத்திலிருந்து
ஒரு மிருகம் என்னை இழுத்துச்சென்றுவிட்டது;
கடைசியாக நான் அவளுக்கு முத்தமிடவில்லை
அவளது கண்களின் வழமையாயிருக்கும் ஒளியை நான் காணவில்லை
கணங்களின் முடிவற்ற வலி தொடர்கிறது,
கடைசிவரை, நட்சத்திரங்களையோ புறாக்களையோ
எதிர்பார்த்த அவளுக்குச் சொல்லுங்கள்
எனது காலத்திலும் எனது காலமாயிருந்த
அவளது காலத்திலும் நான் அவற்றைக்காணவில்லை;
என்னை ஒரு மிருகம் இழுத்துச்சென்றுவிட்டது.

நான்,
இனிமேல்,
எனது சித்திரவதைக்காலங்களை
அவளுக்கு ஞாபகப்படுத்தமுடியாது
எனவே தோழர்களே,
நான் திரும்பமாட்டேன் என்றோ அல்லது
மண்டையினுள் குருதிக்கசிவாலோ
இரத்தம் கக்கியோ
சூரியன் வெளிவர அஞ்சிய ஒரு காலத்தில்
நான் செத்துப்போவேன் என்பது பற்றிச்சொல்லுங்கள்.

நம்பிக்கையற்ற இந்த வார்த்தைகளை
நான் அவளுக்குப் பரிசளிப்பது
இதுவே முதற்தடவை, எனினும் அவளிடம் சொல்லுங்கள்
அவர்கள் எனது இருதயத்தை நசுக்கிவிட்டார்கள்
மூளையை நசுக்கிவிட்டார்கள்
என்னால் காற்றை உணர முடியவில்லை.

*எஸ்போஸ்*
10.09.2001 கைது செய்யப்படுவதற்கு எட்டு நாட்களுக்கு முன்னர் எழுதியது

www.padippakam.com



"சொற்கலையின் அரசியாக கவிதை உள்ளது. மொழியின் உச்சப் பயன்பாடு கவிதையிலேதான் நிகழ்கிறது. ஒப்பீட்டளவில் சுருக்கமும் செறிவும் மிகுந்த இலக்கிய வடிவம் கவிதைதான்"

## சிசு வதை

உடலை வளர்த்தாய்
மனசை வளர விடாமல்...,

சொல்லித்தந்தாய்
கேள்வி கேட்கமுடியாமல்...,

வயதுக்கு வயது அறிவூட்டினாய்—
செயற்பட வழியில்லாமல்..!

உயிரைத்தந்து—
உணர்ச்சிகளைப்பறித்தாய்.

பயத்தைக் கற்பித்து—
பாடத்தை மூடிவிட்டாய்.

சாட்சிகள் எத்தனை
சரியாய் இருப்பினும்
மன்னிப்பை அன்றி—
மரணதண்டனைதான் விதிக்கிறாய்.

என்னை ஒத்தவர்கள்
குளிரோடையிற் படகு விட்டுக்
குதூகலிக்கிறார்கள்.

அனலோடைக்குள் அகப்பட்ட
என் ஓடத்திற்கு
துடுப்பாவது நீ தரவில்லை.

வாரிசுகளை வரவேற்க
அவர்கள் கைகளில்
பூங்கொத்துகள்,
உன் கைகளில் மாத்திரம் ஆயுதம்.

*அனார்*

## நினைவுகளில் எஞ்சிய கத்தி

கசாப்புக்கடையின் இரத்த வாடை
என்னை ஆக்கிரமித்துக் கொள்கிறது.
இறுக்கிக் கட்டப்பட்ட கைகளும் கண்களும்
இன்னும் அப்படியே உள்ளன.

எரிதிரவ வாயு நிரப்பப்பட்ட
பொலித்தீன் பை முகத்தில் கட்டப்பட்டிருக்கிறது.
மெல்ல மெல்ல என் நினைவு
மங்கிப் போவதாய் உணர்கிறேன்.

நினைவுகளை ஒரு நிலைப்படுத்த
முயல்கின்றேன் முடியவில்லை.
கோர முக வண்டுகளின் இரைச்சல் காதில்
கேட்பதாயும்
ஆழ் கிணற்றினுள் இருந்து பலர் என்னை
ஏதோ அதட்டிக் கேட்பதுமான பிரமை.

இடையிடை என்னுடலில் கொடுவலிகள்
தோன்றுகின்றன.
பனிப்பாறையின் நடுவே எனதுடல்
வைக்கப்பட்டிருப்பது போன்ற விறைப்பு

மீண்டும் மீண்டும் உடல் முழுவதும்
ஊசி முனைகளால் குத்துவதான
வலி பரவுவதை உணர்கிறேன், ஆனாலும்
நான் இன்னும் மரணிக்கவில்லை.

*ஆத்மரிஷி*



படிப்பகம்

www.padippakam.com



## பழையதை மறந்து...

பூமியின் இருதயம்
வாடிச்சருகாகி
உதிர்கிறது அந்தரத்தில்

வருடம் ஒவ்வொன்றும்
வேதனையில் கழிகிறது.
தொண்ணூற்றைந்திடப் பெயர்வு
வரவேற்ற எங்களூர்
இன்று
வசந்தத்தை இழந்து
பாலைவனமாய்...
வானுயர்ந்த மரங்களெல்லாம்
சாய்ந்து கிடக்கிறது.
நீண்டு சென்ற பாதையெல்லாம்
நீள் காடாய்த் தொடர்கிறது.
பாலினங்கள் வாழ்ந்த மண்ணில்
பண்றிகளே நடக்கின்றன.
உழவர்கள் வியர்வையெல்லாம்
உப்பாகப் போகிறது.

'நேசித்த உறவில்லை
சேர்த்து வைத்த பொருளில்லை
ஆசைக்கு ஊரில்லை'
இப்படித்தான் உள்ளங்கள்
குமுறிக் கொந்தளிக்கும்.

பேச்சுக்களில் நம்பிக்கை
யாரும் கொள்ளவில்லை
பேசிப்பேசி இனி
பேச எதுவுமின்றி வாய் உலர்ந்தது.

இழந்த நிம்மதியை
எங்களுக்குள்ளிருந்து
ஒளிரும் ஒரு சுடரில்
ஏற்றுவோம்.

*மீனா அருணாசலம்*

"கவிதை என்பது ஒரு கலை வடிவம். கவிதையைப் படைப்பவன் உணரும் உக்கிரத்தை வாசக மனமும் உணரும்போது கவிதையைப் படைத்ததற்கான நோக்கம் நிறைவேறுகிறது. இது தான் கவிதையின் சமூகச் செயற்பாடு இந்த நோக்க நிறைவேற்றம் என்னும் விளைவைச் சாத்தியமாக் கும் வகையில் கவிதையில் ஏறியிருக்கும் பல குணங்களின் தொகுப்பையே கவிதையின் கலைத் தன்மை என்கிறேன்."

-சுந்தரராமசாமி

## லண்டன் மகனும் வன்னித் தந்தையும்

குளிரால் நடுங்கிய குரலுடன்
முன்வேலி பூவரசு
முற்றத்துப் பூமரங்கள்
கொழுத்த கடுவன் நாய்க்குட்டி
கொம்பு முறிந்த வெள்ளைப்பசு
கோடியில நின்ற கறிமுருங்கை
கோயிலுக்கு விட்ட ஆட்டுக்கடா
எல்லாம் எப்படியிருக்கு?
என்று கேட்டான் மகன்...
மகனே... நாங்களும்
சூரியக்கதிர்
உண்மை வெற்றி
வெற்றி நிச்சயம்
வேறும் பலவிற்கும்
வெளிக்கிட்டு அலைமிறம்
வீட்டு நினைவெல்லாம்.....
தெரு அலைச்சலால் நினைவில்லை
தீச்சுவாலைக்குப் பிறகு
திரும்பிப் போகலாம் போல இருக்கு
பசிக்குதடா எங்களுக்கு
பத்தாயிரமெண்டாலும் அனுப்பன்.

*கனகரவி.*





படிப்பகம்

## உன்னுடைய பெயரை நான் உச்சரிப்பேன்

Leopold Seda r Senghor

நாயெற்!
உன்னுடைய பெயரை நான் உச்சரிப்பேன்
உன்னை
உரத்து முழங்குவேன்

நாயெற்!
உன்னுடைய பெயர்
கறுவாயைப் போல் மென்மையானது
அதன் நறுமணத்தில்தான்
கொடித்தோடை மரங்கள்
துயில் கொள்கின்றன

பூத்துச்சிலிர்த்திருக்கும்
கோப்பி மரங்களின்
இனிமையூட்டிய, தெளிவான அழகும்
உன் பெயர்தான்... நாயெற்...

நடுப்பகல் கதிரவனின்
ஆண்மை மிக்க
கதிர்களை நோக்கி
மலர் விரிகின்ற
சவானாக்களையும்
ஒத்திருக்கிறது
உனது பெயர்.

பனியின் பெயரும் அதுதான்
புளியமரத்தின் நிழல்களை விடக் கிளர்ச்சி தருவது
பகல் பொழுதின்...
வெப்பங்கள் மௌனிக்கப்படும்
குறும் மாலைப் பொழுதை விட,
அதிக இனிமையானது

நாயெற்
அது ஒரு உலர்ந்த சூறாவளி
மின்னலினுடைய முழக்கவொலி—
நாயெற்
அது ஒரு பசும்பொன் நாணயம்
மின்னுகின்ற நிலக்கரி
எனது இரவும் நீ
எனது சூரியனும் நீ
அந்தத் திருப்புமுனை நாட்களிலே
பூட்டாவிலிருந்து நாடு கடத்தப்பட்ட
எலிஸ்ஸா இளவரசியே
உன் கதாநாயகனாய் நான் இருந்தேன்

இப்போதோ, உன் பெயரை உச்சரிப்பதற்காய்
உன்னுடைய
சூனியக்காரனாய்
ஆகிப்போனேன்

*தமிழில்:குழல்*

## கிசாவின் மகன்.

(பராக்கிரமபாகு கொடித்துவக்கு வின் சிங்களக் கவிதை)

"ஒரு பிள்ளையும் இறக்காத
வீட்டிலிருந்து
கொண்டுவா கடுகு கொஞ்சம்"

—என் மகன் இறந்தபோது,
நீர் இப்பச் சொன்னதாக ஞாபகம்
பிரபுவே!

—எனக்குப் புரிந்தது,
நீர் குறிப்பிட்ட விதமாய்
கடுகு பெறுவது
கஸ்டமானது என்று

—இருந்தும்,
நான் தெருத்தெருவாய் அலைந்தேன்;
வீடு வீடாய் எனது கால்கள் ஏறி இறங்கின;
பிரபுவே!
நீர் குறிப்பிட்ட விதமாய்
கடுகு பெறமுடியவில்லை.
ஆனால்,
ஒவ்வொரு கிராமத்து வீட்டிலும்
என் மகன் மறுபிறப்பெடுத்து
தம் தாய்மார்களின்மடியில்
தவழ்ந்து விளையாடுவதை
கண்டு மகிழ்ந்து
மனதால் அவர்களை அணைத்துக் கொண்டேன்.

*ஆங்கிலத்தில்: றெஜீ சிறிவர்த்தனா*
*தமிழில்: கந்தையா ஸ்ரீகணேசன்*

குறிப்பு: பௌத்த கதையொன்றில் கிசா கோதமி என்கின்ற தாய் தன் மகனின் இழப்பைத் தாங்க முடியாது தன் பிள்ளையை மீட்டுத்தருமாறு பகவான் புத்தரிடம் சென்று, மன்றாடினாள். புத்தரோ, யாரும் இறக்காத வீடுகளில் இருந்து கடுகு கொஞ்சம் வாங்கி வரும்படி அவளுக்குக் கூறினார். அவளால் அப்படி ஒரு வீட்டையும் கண்டு பிடிக்க முடியாமல் மகனின் துயரத்திலிருந்து மீண்டு புத்தரிடம் வந்ததாக கதை ஒன்று உள்ளது.

www.padippakam.com



# முதன்மை பெறும் பிரச்சினைகளின் கவிதை

**–கவிஞர் சோ.பத்மநாதன் அவர்களுடன் ஒரு தொலைபேசி உரையாடல்**



சோ.ப. என இரண்டு எழுத்துக்களால் அறியப்பட்ட கவிஞர் சோ.பத்மநாதன் ஆங்கில ஆசிரியராக, விரிவுரையாளராக, பலாலி ஆசிரிய கலாசாலை அதிபராக கடமையாற்றி ஓய்வு பெற்றவர். யாப்பு நடைமுறைகளை அறிந்து கவிதை எழுதும் ஒரு சிலருள் 'கவிதை' எழுதிவருபவர். சமகாலத்தை தன் கவிதையில் உயிர்த்துடிப்புடன் வெளிப்படுத்துபவர். *'காவடிச்சிந்து'* (பாடல்), *'வடக்கிருத்தல்'* (கவிதை) தெகுப்புகளின் வெளியீட்டைத் தொடர்ந்து அவரின் ஆபிரிக்கக் கவிதை மொழிபெயர்ப்பு தற்போது இனுவில் கலை இலக்கிய வட்டத்தின் வெளியீடாக வெளிவந்துள்ளது. சோ.ப. அவர்கள் கவிஞர், மொழிபெயர்ப்பாளர், பேச்சாளர் என பலதுறைகளில் இயங்கி வருகிறார்.

*குண்டு வீச்சு, செல்லடி, உணவுப் பற்றாக்குறை முதலியவற்றிற்கு அன்றாடம் முகம் கொடுப்பவன் எழுதுவது, தென்னிலங்கையிலிருந்து ஏழுதுவது, வெளி நாட்டில் வாழ்பவன் எழுதுவது என்று ஒவ்வொன்றும் உணர்வுத் தளத்தில் வேறுபடுவன. முதலாவதிலிருக்கின்ற சத்திய ஆவேசம் மற்றையவற்றில் இருக்க வாய்ப்பில்லை.*

என்று சொல்கின்ற திரு சோ.பத்மநாதன் அவர்களை தொலைபேசி உரையாடலின் மூலம் நிலம் இதழுக்காகச் சந்தித்தோம். இச்சந்திப்பு நிகழ்வதற்குப் பெரிதும் உதவி மதிப்பிற்குரிய நண்பரும் விரிவுரையாளருமான திரு.கந்தையா ஸ்ரீகணேசன் அவர்களுக்கு எனது நன்றிகள்.

–எஸ்போஸ்



படிப்பகம்

www.padippakam.com



உங்களால் கவிதை எழுதப்படும் போது அது யாருக்கு எதற்காக ஏன் எழுதப்பட வேண்டும் என உங்களுக்குள்ளே கேள்விகள் எழுந்ததுண்டா? "எனது ஆத்ம திருப்திக்காக எழுதுகிறேன்" என்று சொல்லப்படுவது பற்றி?

ஏன்-கவிதை- எழுதுகிறேன் "எழுதாமல் இருக்க முடியாததால்" என்பதே என் பதில். என்னைச் சுற்றி நிகழ்பவை இல்லத்தில், ஊரில், நாட்டில், உலகில்- என்னைப் பாதிக் கின்றன. அப்பாதிப்பிற்கான எதிர்வினையே என் கவிதை. என் அனுபவங்களை சக மனிதர்களோடு பகிர்ந்து கொள்ள விழைகிறேன்: I am a man Speaking to man இம் மக்கட் கூட்டத் தின் குரலாய் என் கவிதை ஒலிக்க வேண்டும் என ஆசைப் படுகிறேன். இக் கோணத்திலிருந்து நோக்கும் போது யாருக்காக எழுதுகிறேன் என்ற தெளிவு எனக்கு இருக்கிறது.



கவிதைகளின் மூலம் பிரச்சினைகளை முன் வைப்பது அல்லது தீர்வு சொல்வது சாத்தியமாவ தைப் போல ஒவ்வொரு கவிதையிலும் ஒரு தோல்வியும் முடிவும் நமக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது, அது எமது எதிர்காலத்திற்கான ஒரு சந்தர்ப்பத்தை மிகச்சடுதியில் தந்து மறைகிறது என நான் நினைக்கிறேன்.

பிரச்சினைகளை முன்வைப்பது சரி. எல்லாவற்றிற்கும் தீர்வு சொல்வது சாத்தியமா? சரி-பிழை, நியாய, அநியா யங்கள், சார்பு நிலை பற்றியவை என்பது அனுபவம் நமக்கு உணர்த்தும் பாடம். ஒவ்வொரு கவிதையிலும் ஒரு தோல் வியோ வெற்றியோ காத்திருக்கிறது என்பது எனக்கு உடன்பாடே, அது கூட சார்பு பற்றி யது தான். நல்ல கவிதை தோற்றுப் போவது முண்டு சராசரியான கோஷம் வரவேற்பைப் பெறுவதுமுண்டு.

கவிதைக்கும் அரசியலுக்கும் கவிஞனுக்குமான பிணைப்புக் குறித்து?

அரசியலை விட்டு நாம் விலக முடியாது. அது வாழ்க்கையில் இருந்து பிரிக்க முடியாதது. மனிதன் சமூக விலங்கு. தான் வாழும் சமூகத்தைப் பற்றிய அக்கறை சாதாரண மனிதனுக்கே அவசியம் என்றால், கவிஞனைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. தீ பெற்றோலைப் பற்றுவது போல பிரச்சினை கவிஞனைப் பற்றிக் கொள்கிறது.

யுத்த காலங்களில் குறிப்பாக இன்றைய நாட்களில் எழுதப் படுகின்ற தனிமனித உணர்வு களால் மையப்பட்டிருக்கும் கவிதை கள் இந்த சமூகத்தின் மூது எவ்வாறான பிரதிபலிப்பை ஏற்படுத்தும் என நினைக்கிறர்கள்?

தனி மனிதர்களால் உருவாவது தான் சமூகம். தனிமனித உணர்வு களை கவிதை சொல்லக் கூடாது என்று எந்தத் தடையும் இல்லை. தன் உணர்ச்சிப் பாங்கான -Romantic- கவிதை செல்வாக்கு இழந்து விட்டது எனச் சொல்ல வருகிறீர்கள் என்று நான் புரிந்து கொண்டால் இன்றைய போர்ச் சூழ்நிலையில் அது எடுபடாது- பொருத்தமற்றது- என்பதை மறுக்க மாட்டேன். ஆனால் ஒன்று, அழகுணர்ச்சி மனிதனுக்கு இயல்பானது A thing of beauty is a joy for ever. என்பான் Keats.



படிப்பகம்

www.padippakam.com



*எமது நிலம், நேற்றிருந்த நிலக்காட்சிகள் மற்றும் பிற உன்னதமான கவிதைகள் எல்லாம் எமது கண்களிலிருந்து மறுக்கப்பட்டு விட்டன எனவும் எமது யதார்த்தத்தின் மீது மிகப்பெரிய பாறையாய், வலியாய் இது வாழ்ந்திருக்கிறது எனவும் இன்றைய உங்களின் வாழ்வை உணர்கிறீர்களா? அல்லது அதற்கு மேலும்...*

காட்சிகள் மாறியுள்ளது மட்டுமல்ல. அடையாளம் காணமுடியாத அளவுக்கு நிலத்தோற்றம் மாறிவிட்ட அவலத்தைக் காணும் துர்ப்பாக்கியம் எமக்கு. விடுதலையின் பேரால் நாம் கொடுத்திருக்கின்ற விலை மிக மிக அதிகம் என்ற ஆயாசம் ஏற்படுவதை என்னால் தவிர்க்க முடியவில்லை.



ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு பிரச்சினை முதன்மை பெறும். சாதீயம், சீதனக் கொடுமை, இன விடுதலை, பெண்ணியம் முதலியனவற்றுள் எது எரியும் பிரச்சினையாக இருக்கிறதோ அது பற்றியே எல்லோரும் எழுத முனைவர்.

*இன்னும் போர் நடந்து கொண்டிருக்கின்ற, இராணுவம் முற்றிலும் இல்லாத குடிமக்கள் வாழும் பகுதிகளிலிருந்து படைக்கப்படுகின்ற கவிதைகளுக்கும் இடையிடையே தாக்குதலுக்குள்ளாகும் நாட்டின் ஏனைய பிரதேசங்களிலிருந்து படைக்கப்படுகின்ற கவிதைகளுக்கும் படைப்புகளுக்கும் இடையே வேறுபாட்டை உணர்கிறீர்களா?*

வேறுபாடு நிச்சயம் இருக்கிறது. குண்டு வீச்சு, செல்லடி, உணவுப் பற்றாக்குறை முதலியவற்றிற்கு அன்றாடம் முகம் கொடுப்பவன் எழுதுவது, தென்னிலங்கையிலிருந்து எழுதுவது, வெளி நாட்டில் வாழ்பவன் எழுதுவது என்று ஒவ்வொன்றும் ஒரு ரகம். முதலாவதிலிருக்கின்ற சத்திய ஆவேசம் மற்றையவற்றில் இருக்க வாய்ப்பில்லை.

*அதிகார பலம் கொண்டவர்களை மறுத்து, அதிகாரபலத்துக்கு உட்படுத்தப்படும், அடக்கி ஒடுக்கப்படும் மக்களால் எழுதப்படுகின்ற கவிதைகள், படைப்புகள் அவர்களிடையே மிகத் துரிதமான மாற்றத்தையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்தும் என நம்புகிறீர்களா?*

எதிர்ப்பிலக்கியம் என்று சொல்லுவார்கள். நிச்சயம் அது விழிப்பை ஏற்படுத்தும். சொல்லப்போனால், இன்று உலகெங்கும் அத்தகைய இலக்கயத்திற்கு நல்ல வரவேற்பு உண்டு

மக்கள் தங்களுக்கான முடிவை அதிகாரத்தின் கையில் ஒப்படைத்து விட்டு அவர்கள் பொறுபற்றவர்களாக மாறி வருகிறார்கள், அப்படியே முன்னோர்களின் எழுத்தில் தொங்கிக் கொண்டிருக் கிறார்கள். குறிப்பாக தேவாரம், திருவாசகம் போன்ற பக்தி இலக்கியங் களிலும் மகாபாரதம், இராமாயணம் போன்ற இதிகாசங் களிலும், சாராசரி மக்களுடைய இன்றைய வாழ்வு திணிக்கப்பட்டு இருக்கிறது. நிகழ்கால இலக்கியம் அவர்களுக்கு சொல்லப்படவில்லை என்பதும் சரியா?

பல விஷயங்களை ஒன்றாக முன்வைக்கிறீர்கள். அநீதிக்கெதிராக போராடமல் பழையனவற்றின் நிழலில் ஒதுங்கும் (தப்பும்) மனோபாவம் escapist கண்டிக்கத்தக்கதுதான் ஆனால் பக்தி இலக்கியம், இதிகாசங்களா கியவை இக்காலத்திற்கு அறவே ஒவ்வாத வை



படிப்பகம்

www.padippakam.com



என்ற கருத்து எனக்கு உடன்பாடல்ல. எவ்வளவு தான் முக்கியமானதாக இருந்தாலும் நிகழ்காலத்தில் மட்டும் வாழ நம்மால் முடியுமா? திருவாசகத்தை, திவ்விய பிரபந்தத்தை இலக்கியமாக படிக்கும் கொம்யூனிஸ்டுகளை நான் அறிவேன் .இதிகாசங்கள் எக் காலத்துக்கும் உரிய சில அடிப்படை அறங்களைச் சொல்லும்... வாழ்வின் யதார்த்தங்களை மறப்பித்து ஒரு பொய்மைக் கனவுக்குள் சமயம் சராசரி மனிதனைத் தள்ளுகிறது என்பது மாக்ஸிய சித்தாந்தம். இதில் உண்மையில்லாமல் இல்லை.

*கவிதை மொழியைப் புதுப்பிப்பது அல்லது எமக்கான புதிய பதங்களைக் கண்டறிவதற்கான புதிய மொழியை உருவாக்குவது, அப்படியென்றால் மரபை மீறுவது குறித்தான தங்களின் நிலைப்பாடு என்ன?*

கவிதை மொழி சாதாரண மொழியிலிருந்து வேறுபட்டது. ஆற்றலுள்ள கவிஞர்கள் புதிய பதங்களை உருவாக்குவார்கள் அல்லது பேச்சு வழக்கிலிருந்து கொண்டுவருவார்கள். மரபு மீறல் காலத்துக்குக்காலம் நிகழ்ந்து கொண்டே வருகிறது. கடவுள் வாழ்த்துப் பாடிய தமிழன் தமிழ்மொழி வாழ்த்துப் பாடியதும் ஆண்டவனுக்கு பள்ளியெழுச்சி பாடியவன் பாரத மாதா திருப்பள்ளிழெழுச்சி

"பிற நாடுகளிலிருந்து கொண்டு ஈழத்து வாழ்வனுபவங்களில் இருந்து விலகி இன்றைய ஈழத்து அரசியல் பற்றி எழுதுவது அபத்தமானது."

பாடியதும் மீறல்கள் தான். என் நிலைப்பாடு இதுதான்: மரபை மீறுவதற்கு மரபு இன்னது என்ற தெளிவு வேண்டும்.

*நீங்கள் ஒரு கவிஞர், மொழிபெயர்ப்பாளர், பேச்சாளர் என பலதுறைகளில் இயங்கி வருகிறீர்கள் பிற மொழி இலக்கியங்களோடு மிக அதிகமான தொடர்பினைக் கொண்டவர் என்ற முறையில் நீங்கள் மொழிபெயர்க்க கையாண்டிருக்கின்ற மொழிகளில் எழுதப்பட்ட போர்க் கவிதைகளையும் இன்று தமிழில் எழுதப்பட்டு வரும் சமகால கவிதைகளையும் எவ்வாறு உணர்கிறீர்கள்?*

பிற மொழிப்பரிச்சயம் எனக்கு ஆங்கிலம் மூலமே ஏற்படுகிறது. ஆபிரிக்கக்கவிதையைச் சற்று விரிவாகப் படித்திருக்கிறேன். மிக மோசமான ஒடுக்கு முறையச் சந்தித்த அம் மக்களுடைய நிராசைகளை, குமுறலை, ஆவேசத்தை, எழுச்சியை அக்கவிதை பேசுகிறது. இன்று தமிழில் எழுதப்படும் கவிதைகளில் இப் பண்புகளைக் காண்கிறேன். ஆனால் ஒன்றைச் சொல்லியாக வேண்டும். வெளிவரும் கவிதைகள் எல்லாம் தரமாய் அமைந்து விடுவதில்லை.

*நாம் தற்போது உண்டு பண்ணி வைத்திருக்கின்ற கவிதைப் பாணிக்கும் சொல்லணிக்கும் எதிராகப் போராட வேண்டிய தேவை இருக்கிறதா? அல்லது அவ்வாறானதொரு கவிதைப் பாணியும் சொல்லணியும் நம்மிடையே இல்லையா?*

கவிதைப்பாணி என்பது Style. எமது பழந்தமிழ்க் கவிதையிலே, பாணியை ஓசையோடு தொடர்புபடுத்தி வைத்தார்கள். செப்பலோசை- இருவர் உரையாடுவது போன்றது. அகவலோசை -ஒருவர் பேசுவது போன்றது. துள்ளலோசை தாழ்ந்தும் உயர்ந்தும் வருவது, கலிப்பா வகை. தூங்கலோசை- துள்ளாது தூங்கி வருவது. ஈழத்து தற்காலக்கவிதை பேச்சோசையை



படிப்பகம்

முதன்மைப்படுத்தி பெருவெற்றி கண்டு ள்ளது. அணிகள் கவிதையை அழகு படுத்துபவை. அலங்காரத்தை மிகையாகச் செய்யக் கூடாது. அணிகளைப் பொருட் படுத்தாத புதுக்கவிதை கூட உருவகங் களை அடுக்கிச் செல்வது காணலாம்.

*ஒரே காலத்தில் வெவ்வேறு கவிஞர்களால் தன்மையில் ஒத்தமொழிப்பிரயோகங்களும் கவிதை எழுதும் முறைமையும் கையாளப்பட்டு வருவதற்கு இன்றைய சூழலில் பிரத்தியேகமான காரணங்கள் எதுவும் இருக்கிறதா?*

ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு பிரச்சினை முதன்மை பெறும். சாதீயம், சீதனக் கொடுமை, இன விடுதலை, பெண்ணியம் முதலியனவற்றுள் எது எரியும் பிரச்சினையாக இருக்கிறதோ அது பற்றியே எல்லோரும் எழுத முனைவர். இது தவிர்க்க முடியாதது. ஆனால் எந்த வடிவத்தையும் பயன்படுத்துவது என்பது தனிப்பட்ட கவிஞன் ஒருவன் படைப்பு முயற்சியில் ஈடுபடும் போது எடுக்கும் முடிவு.

ஆற்றல் மிக்க- ஆளுமை மிக்க கவிஞன் ஒரு வடிவத்தை வெற்றிகரமாக கையாண் டால் பலர் அதே வடிவத்தை தாமும் எடுத்தாள்வர். பாரதிதாசனைப் பின்பற்றி பலர் எண்சீர் விருத்தம் எழுதலாயினர். இதனால் ஒரு வாய்ப்பாட்டுத் தன்மை வந்துவிடுகிறது. இவ்வாறே அகவலும் அறுசீர் விருத்தமும் மலினப் பட்டுப் போயின. இன்று எழுதப்படும் புதுக் கவிதைகளையும் இந் நோய் பீடித்துள்ளது.

மொழிப்பிரயோகமும் பொருளுக்கு ஏற்ப, சந்தர்ப்பத்துக்கு ஏற்ப- மாறுபடும். நுஃமான் - இலைக்கறிக்காரி- என்ற கவிதையில் முஸ்லிம் பேச்சு வழக்கை அற்புதமாகப் பிரயோகிக்கிறார்.



"நட்டடங்கா இன்னும் நாலுபடி வையென்றான் கட்டாகா கன்றார் கறிக்காறி"

சு.வில்வரத்தினம் எமது செந்நெறி இலக்கியங்களில் பயிலும் சொற்றொடர் களைப் பயன்படுத்துவார். ஆக முறைமை அல்லது Style என்பது கவிஞனுடைய மொழிஞானம்- ஆளுமையைப் பொறுத்தது.

*கவிதையின் பல்வகைத் தன்மை பற்றி அதாவது அதன் இசைப் பரிமாணம் கவியரங்கு ஆற்றுகை மற்றும் கவியரங்கில் கவிதையின் வெளிப்பாடு...?*

இசைப்பாக்கள் ஒரு வகை. அவற்றில் இசையமைப்பு முதன்மை பெறும். இசைப்பாவில் கவிதைப்பண்பும் இணைந்து விட்டால் அதன் சுவையே தனி. கவியரங் கக் கவிதை கேட்போனுடன் நேரடியாகத் தொடர்பு கொள்வது, சில அடிகள்/ தொடர் கள் திரும்பத்திரும்ப வரவேண்டும்- பல்லவி போல பேச்சோசை எடுப்பாயிருக் கும். எளிமை, ஓசை நயம் எல்லாம் அவசியம்.

www.padippakam.com



*பழந்தமிழ் இலக்கியப் பரிட்சயம் ஒரு புதிய கவிஞனை எந்தளவிற்கு ஆற்றுப்படுத்தும்?*

நாம் சுயம்பு அல்ல. எமக்கென்று நீண்டதொரு கவிதை மரபு உண்டு. என் தந்தை பார்த்த உலகம் ஒன்று என் பாட்டன் பார்த்த உலகம் வேறென்று. தந்தையின் தோளிலும் பாட்டனின் தோளிலும் ஏறிநின்று நான் பார்த்த உலகம் வேறொன்று. பழந்தமிழ் இலக்கியப்பரிச்சயம் உள்ள கவிஞன் அதிக தூரம் பார்க்கிறான்.

*ஒரு கல்விசார் அறிஞனாக மிளிரும் தாங்கள் ஒரு கவிஞனுக்கு தேவைப்படும் முறைசார் கல்வியின் அவசியம் பற்றி என்ன கருத்தைக் கொண்டுள்ளீர்கள்?*

கற்றவர்கள், பண்டிதர்கள் எல்லோரும் கவிஞர்களாவதில்லை. ஆக்கத்திறன் வாய்ந்தவர்களே கவிஞர்களாக கலைஞர்களாக வருகிறார்கள். ஆக்கத்திறனை கல்வி மேலும் சுடர் விடச்செய்யும். கவிஞர்கள் நிறைய வாசிக்க வேண்டும் என நம்புகிறவன் நான். அகன்ற வாசிப்புப் பரப்பை உடையவர்கள் ஆழமான கவிதைகளை எழுதுகிறார்கள்.

*தற்காலத்தில் எழுதப்பட்டு வரும் ஈழத்தமிழ்க் கவிதைகள் இருண்மைத் தன்மைக்கு உட்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறதே.*

எனக்கு இடையிடையே இவ்வாறான உணர்வு ஏற்படுவதுண்டு. ஆனால் சில உச்சமான கவிதைகள் வெளிவரக் காண்கையில் இந்தத் தளர்ச்சி நீங்கிவிடும். அண்மைக்காலங்களில் வில்வரத்தினம், சிவசேகரம், நட்சத்திரன் செவ்விந்தியன், அஸ்வகோஸ், த.ஜெயசீலன், றஸ்மி, கஸ்ரோ, சிவசிதம்பரம், கருணாகரன், இயல்வாணன், ஆகியோர் எழுதும் கவிதைகளைப் படிக்கும் போது ஈழம் கவிதையில் முன்னணியில் நிற்கிறது என்று மனம் தேறுகிறேன்.

*தற்போது பத்திரிகைகள் சஞ்சிகைகளில் வெளிவந்து கொண்டிருக்கும் கவிதைகள் - கவிதை இலக்கியம் மற்றும் இவை சார்ந்த விமர்சனங்கள் பற்றிய தங்களின் எண்ணம் என்ன?*

நிறையப்பேர் "கவிதை" எழுதுகிறார்கள். பத்திரிகைகளும் பக்கங்களை ஒதுக்குகின்றன. அவை கவிதையாய் இல்லை என்பது என் கவலை. கவிதை மொழியின் சிகரம், தமிழை வழுவின்றி எழுத முடியாதவர்கள் கவிதை எழுத முற்படுவது தான் இன்றைய அவலம். கவிதைக்கும் செய்யுளுக்கும், கவிதைக்கும் உரை நடைக்கும் உள்ள வேறுபாடுகள் பலருக்குத் தெரிவதில்லை... விமர்சனம் பற்றிக் கேட்கிறீர்கள், ஈழத்தில் நாம் ஒரு சிறிய வட்டத்திற்குள் சுற்றி வருகிறோம். -நூலாசிரியர், விமர்சகர், வாசகர் எல்லோ ரும். இதனால் மனம் விட்டு விமர்சனம் எழுத முடிவதில்லை. எங்கள் "பணச்சடங்குகள்" போல விமர்சனமும் ஒரு கடப்பாட்டுச் சடங்காகி விட்டது. இது ஒரு புறம். தனிப்பட்ட கோப தாபங்களை படைப்பின் மீது காட்டி கடித்துக்குதறும் "விமர்சனம்" மறுபுறம். இதுவும் நேர்மை ஆகாது. புறவயம் (Objective) என்று சொல்வார்கள். விமர்சகன் சற்று விலகி நின்று, படைப்பை சீர்தூக்கு வது என்பது இந்நாட்டில் அடையாத இலட்சியமாகவே இருந்து வருகிறது.

*புலம் பெயர்ந்து வாழும் எழுத்தாளர்கள் ஈழத் தமிழர் வாழ்வு பற்றி எழுதக் கூடாதா?*

அப்படியல்ல, புலம்பெயர்ந்து வாழ்வோர் மேற்குலக வாழ்வைச் சார்ந்திருப்போர் உடலுக்கு ஒத்துவராத குளிர், வேற்று மொழி, வித்தியாசமான வாழ்வும் அது தரும் அனுபவங்கள் பற்றியும் அவற்றின் முரண்பாடுகள் பற்றியும் எழுதலாம், அது தான் சுவாரசியமாக இருக்கும். பிற நாடுகளிலிருந்து கொண்டு ஈழத்து வாழ்வனுபவங்களில் இருந்து விலகி இதன் அரசியல் பற்றி எழுதுவது அபத்தமானது. (No First Hand Experience with him.) ■



படிப்பகம்

www.padippakam.com





"என்னதான் வேறுபாடுகள் இருந்தாலும் ஒடுக்கப்பட்டவர்களின் ஏக்கக்குரலும், வீறு கொள் எழுச்சி முழக்கமும், புதிது புனையும் முனைப்பும், பொதுமை நாட்டமும் எங்கும் ஒன்று போலத்தான்."

## சமகால வாழ்வு குறித்த மீள் வாசிப்பு...




**காலத்தின் புன்னகை**
சித்தாந்தன்
குலன் வெளியீட்டகம், கோண்டாவில்,
யாழ்ப்பாணம்.

அரச கட்டுப்பாடில்லாத பகுதிகளில் வெளிவரும் சஞ்சிகைகளிலும் செய்தித்தாள் களிலும் பிரசுரமாகும் ஆக்கங்களை நாட்டின் பிற பகுதிகளில் பெறுவது கடினம். இத்தகைய ஆக்கங்கள் நூல் வடிவு பெறும்போது ஒரு சில பிரதிகளாவது வாசகர்களை வந்தடைகின்றன. இதன் விளைவாக நல்ல படைப்பாளிகளை அறியும் வாய்ப்பு நமக்குக் கிடைக்கின்றது.

சித்தாந்தனின் கவிதைகள், கவிஞர் இயக்கச்சிக் கருணாகரன் முன்னுரையில் சுட்டிக்காட்டுவது போன்று, கடந்த தசாப்தத்தில் ஈழத்தில் முனைப்புப் பெற்ற கவிதைப்போக்கை உள்வாங்கியுள்ளன. அவ்வவேளை, உருவான காலமும் களமும் சார்ந்த உக்கிரமான அரசியற் பண்பையும் கொண்டுள்ளன. இன்று, அரசியற் பார்வை இல்லாது கவிதை படைக்கிற படைப்பாளி தன் உணர்வுக்கு நேர்மையாக எழுதுவதாக நம்புவது கடினம். காதற் கவிதையில் கூட இன்றைய போர்ச்சூழல் தன் நிழலை வீசுகிறது.



படிப்பகம்

www.padippakam.com



சித்தாந்தனின் கவிதைகளின் அரசியல் முனைப்புப்பற்றி அய்யங்கட்கு இடமில்லை. அந்த வகையில் போருக்குள் தள்ளப்பட்ட மண்ணின் வேதனையையும் நியாயமான தீர்வுக்கும் அமைதிக்குமான வேட்கையையும் அவரது கவிதைகளில் காணலாம். ஆயினும், அவருடைய கவிதையின் மொழி பிற கவிஞர்களிடமிருந்து அவரை வேறுபடுத்துகிறது. அவருடைய கவிதைகளில் படிமப்பாங்கான அம்சங்கள் வலிதாகவே உள்ளன. அவருடைய உணர்வின் தீவிரம் அவற்றில் பட்டுத்தெறிக்கிறது. இது அவரது கவிதையின் வலிமை.

கவிதையின் கூறுகளாக வரும் படிமங்களின் சுமை கவிதை என்ற படிமத்தையே புதைத்துவிடும் அபாயம் அவரது கவிதைகளில் இல்லை. அதேவேளை, அறமும் அறிவும் சார்ந்த கவிதையின் ஆக்கத்தில், நெகிழ்ச்சியான மொழி கவிதையை வாசகருக்கு நெருக்கமாக்குகிறது. இது போதாமை அவரது கவிதையின் பாரிய பலவீனம். சிலவேளைகளில் சொற்தெரிவுகளும் கவிதையின் மொழியின் நெகிழ்ச்சிக்கு இடையூறாக அமையலாம்.

சித்தாந்தனின் கவிதையின் வலிமையையும் வலிவின்மையையும் அவருடைய எளிமையான ஒரு கவிதையின் துணையுடன் கவனிப்பிற் கொள்வோம்.

### பிணந்தின்னி

கரிய வானத்தில்
தன் சிறகுகளின் படபடப்புடன்
வட்டமிடுகிறது பிணந்தின்னி
பரவசத்தில் தோய்ந்த
அதன் கனவுகளில் துர்நாற்றம்
பிசிறிப்படர்கிறது
அதன் கூரிய அலகுகளில்
குருதி எப்போதுமே வழியும்
பிணந்தின்னி ஒரு பாலைநில வாசி
அது தன் இறக்கைகளை
விரிக்கும் போதெல்லாம்
அக்கினி ஜுவாலையாய் உதிரும்
அதிலிருந்து எழும்
உயிர்களின் ஓலங்கள்
இருள் வானச் சுவரில் எதிரொலிக்கும்
பிணந்தின்னி எல்லாப்பறவைகளையும் போலல்ல
ஆனால் ஒரு பறவையும் கூட அல்ல
அதன் உந்துதலின் ஒலியில்
உயிர்குடித்தலின் விகார ராகம்
பிலிற்றியபடியே இருக்கும்.

கவிதை எதைப்பற்றியது என்று இங்கு விளக்க அவசியமில்லை. அடிப்படையில் மிகவும் தெளிவான கவிதையின் உணர்வின் உக்கிரம் வரிக்கு வரி தெரிகிறது. ஆனால், அதை உச்சப்படுத்தும் நோக்கில் எழுதப்பட்ட சில வரிகள் கவிதையின் தெளிவுக்கும் ஒழுங்குக்கும் ஊறு செய்கின்றன. குறிப்பாக, 'பரவசத்தில் தோய்ந்த அதன் கனவுகளில் துர்நாற்றம் பிசிறிப் படர்கிறது' என்ற சொற்கள் கவிதைக்கு அவசியமானவை அல்ல என்பதோடு சிக்கலை விட அதிகமாக குழப்பத்தையே ஏற்படுத்துவன. சித்தாந்தனின் பிற கவிதை



படிப்பகம்

www.padippakam.com



களில் இல்லாதவாறு, பிணந்தின்னி ஒரு பறவையுமல்ல என்ற விளக்கமும் தேவையின்றித் தரப்பட்டுள்ளது.

எளியனவும் நமது மொழி வழக்கிற்குரியனவுமான சொற்களினிடத்தில் சமஸ்கிருத தன்மை மிக்க சில சொற்களின் பிரயோகம் தேவையா என்ற கேள்வி அடிக்கடி மனதில் எழுகிறது. வடமொழிச்சொற்களோ அயற்சொற்களோ தமிழுக்கு ஆகாதன என்பது என் எண்ணமல்ல. வாசகரைச் சென்றடைவதற்கும் வாசகர் நெஞ்சில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தவும் பரவலான மொழி வழக்கிற்குரிய சொற்கள் கூடிய வலிமை உள்ளன என்பது எனது எண்ணம். துர்நாற்றம் என்ற சொல் பல கவிதைகளில் அடிக்கடி வருவது அதன் தாக்கத்தை இளக்குகிறது. ஜனனம் என்பது பிறப்பு என்பதற்குரிய வட சொல். ஜனிப்பு என்பது அண்மைக்கால உருவாக்கங்களில் ஒன்று. இது போலவே சினேகித்து விட்ட என்ற பதமும் வலிந்து சிக்கலாக்கப்பட்ட இன்னொரு பிரயோகம். இவ்வாறான சொற் பிரயோகங்கள் குறிப்பான நோக்கத்துடனன்றிப் பாவிக்கப்படும் போது எழுத்தை வலுவிழக்கச் செய்யன.

நமது கவிதை மொழியின் அடையாளம் இந்த மண்ணுக்குரியது. கவிதையின் மொழிபற்றிய நமது சிந்தனைகளில் தமிழகத்து மொழிப் பிரயோகத்தின் (குறிப்பாக அயல்மொழி ஆதிக்கத்திற்குட்பட்டதன்) செல்வாக்கு ஓங்குகிறது எனின் நமது மொழியின் ஆளுமை பற்றி நாம் நம்பிக்கை இழக்கத்தொடங்குகிறோம் என்றே சொல்ல வேண்டும். 'தனித்தமிழ்' வழிபாட்டின் நிலைப்பாட்டிலின்றி நமது வாழ்விற் நெருக்கமான மொழியின் சார்பாகவே இக்கருத்தை இங்கு மிகவும் வலியுறுத்த முற்படுகிறேன்.

கருணாகரன், தனது முன்னுரையில் சித்தாந்தனின் கவிதை முறையின் புதுமைப்பாங்கான பல அம்சங்களை அடையாளம் காட்டியுள்ளார். எதிர்வெளியிற் பாத்திரங்களை படைத்து அவற்றுடன் வேறுபடும் முறைகளில் உறவாடுகிறதான அவரது கவிதை சொல்லும் முறை சிறப்பான ஒரு அம்சம்.

அவருடைய கவிதைக் கோபுரங்களை எழுப்ப அவரது மொழிசார்ந்த மூலப்பொருளை அவர் தமது கவிதைப்பொருள் சார்ந்த சூழலிலேயே தேடிப்பெறுவாராயின் அவரது கவிதைகள் மேலும் எழுச்சியும் பொலிவும் பெறும் என்பதே எனது எண்ணம்.

நூல்களின் புற அமைப்பின் அழகும் நேர்த்தியும் பற்றி நாம் பெருமை பேசிக்கொண்டிருக்கும் ஒரு சூழலில் மலிவான தாளில், ஒப்பிடுகையில் குறைபாடான அச்சு வசதிகளுடன் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் இந்த மண்ணின் குரலைப் பதிவு செய்யும் படைப்புக்கள் வருவதைக் காணும் போது, வேதனையாகவும் அதேவேளை பெருமையாகவும் உள்ளது.

சித்தாந்தனின் கவிதைகள் மேலும் பரவலான வாசிப்பிற்கும் விமர்சனத்திற்கும் வரவேற்பிற்கும் உட்பட வேண்டுகிறேன்.

**சி.சிவசேகரம்**

திறனாய்வு செய்யப்பட்ட நூல்களின் பிரதிகளை நிலம் வெளியீட்டகம், 87, வியாசர் வீதி, தோணிக்கல், வவுனியா. என்ற முகவரியுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

நிலம் இதழுக்கான கவிதைகள், கவிதை சார்ந்த கட்டுரைகள், மொழியியல் ஆய்வுகள் போன்ற பல்வேறு விடையங்களையும் தங்களிடம் இருந்து எதிர்பார்க்கிறோம்

ஆர்.



படிப்பகம்

www.padippakam.com




**ஆபிரிக்கக் கவிதை**
**(மொழிபெயர்ப்பு)**
சோ.பத்மநாதன்
வெளியீடு: செப்டெம்பர் 2001 இணுவில் கலை இலக்கிய வட்டம்
'சிவகாமி வாசா'
இணுவில் கிழக்கு, இணுவில்.
விலை 180.00 ரூபா

மீண்டும் எமது யன்னல்களை ஊடறுத்து வந்திருக்கிறது ஆபிரிக்கக் கவிதை; நாடறிந்த கவிஞர் சோ.ப. அவர்களால் பட்டை தீட்டப்பட்ட நல்ல தமிழில் புதுப் பொலிவுடன்; வேற்று இன உணர்வலைகள் என்ற பேதம் பிரித்துணரப்படாத வகையிலே எமது செந்த மனக்குமுறல்கள் போல. அவை 'ஒடுக்கப்பட்ட, சிதைக்கப் பட்ட ஒரு மக்கட் கூட்டத்தின் இலக்கியம் என்ற வகையில்' (பக்கம்XXV) ஆசிரியரால் மதிப்பார்ந்த பரிவுடன் அணுகப்பட்டு தமிழாக்கப்பட்டவை.

இத் தொகுதியின் மிக்பெரும்பான்மையான கவிதைகள் எமது சொந்த அனுபவங்களுக்கு அணுக்கமானவை. எங்களுடைய வரலாறும் பண்பாட்டுப் பகைப்புலமும் பலவகையில் வேறுபட்டிருந்த போதிலும், அனைத்தையும் மீறிப்பொதுப்பண்பு முனைப்புற்று வெளிப்படுவதை அவதானிக்காமலிருக்க முடியாது.

பெரும்பான்மையான கவிதைகள் அல்லற்படும் ஆபிரிக்கச் சமூகத்தின் இன்றைய நிலவரத்தை அதற்குரிய காரண கர்த்தாக்களுடன் தொடர்பு படுத்திக் காட்டுவன. 'துயரம் போலக் கறுத்த நீக்கிரோவே/ துடிப்பதும் அழுவதும் தொழிலாய்ப் போச்சே!' (ப.08) என்ற ஏக்கம் அப்பழுக்கின்றி வெளிப்படும் கவிதையும் உண்டு. இத்துயருக்குக் காரணமாயிருந்த அந்நிய ஏகாதிபத்திய சக்திகளை நண்பர்களாய்க் கருதி நுழைய விட்ட காலத்தை எண்ணி மறுக்கும் கவிதையும் உண்டு:

*மெலிந்த வெள்ளை மனிதனை விஞ்சியே*
*மேலெழுந்தனன் கறுப்பர் தம் வேந்தன், பின்*
*நலிந்த வெள்ளைக் கைகளைப் பற்றினன்:*
*'நண்ப, வெள்ளைய; நல்லவரவாகுக!'*

*நாணற் தட்டிகள் மூடின; மேற்கு உள்ளே*
*நழுவிப் போக அனுமதி வாய்த்தது!! (ப.24)*

முன்னைய பலம் வீறுடன் இருந்த வேளையில் அந்நியன் சதியை இனம் காணாமல் அடைக்கலம் கொடுத்ததன் பேறு படிமங்களுடாக வெளிப்படும் கவிதையையும் காணலாம். தூக்கணாங்குருவிகள் மேற்குத் திசையிலிருந்து வந்து கூடுகட்டி முட்டையிடுவதை மேற்பார்வை செய்த நிலையில்,

*பிறகு*
*தூக்கணாங்குருவி*
*வீட்டுச் சொந்தக்காரராக மாறியது*
*ஈடேற்றம் பற்றிப் பேசியது (ப.44)*
எனக் காட்டும் கவிதை, அந்த ஈடேற்றத்தை முழுதாக நிராகரித்து
*ஆனால் பிரார்த்தனைகளிலும் நற்கருணையிலும்*
*எங்களால்*
*சேர்ந்து கொள்ள முடியவில்லை*
*நாம் புதிய வீடுகள் தேடுகிறோம்*
*குருவி எச்சத்தால் மாசுபட்ட*


படிப்பகம்

www.padippakam.com



*எங்கள் பழைய கோயில்களை*
*மீளக்கட்ட முனைகிறோம்* (ப.44)

எனச் சுய பாரம்பரியத் தொடர்ச்சியைத் தேட முயல்வதைக் காணமுடியும்.

பொற்செருப்பணிந்த அழகிய இளவரசன் மாலை சூட வருவதைக் கிறங்கிய கண்களுடன் தோற்றமாகக் காணும் போதே 'வாசற்புறத்தே பல்லக்கில்/ மரண தேவன் நிற்கின்றான்' (ப.61) எனக் கூறும் அதிர்ச்சி; 'உக்கும் இலை குழைகள் ஓயாது கொண்டு வந்து/ கக்கும் மரண நெடி காற்றில் கனக்கிறது'. (ப.60) என்ற சமூக நியதி ஆபிரிக்க வாழ்வு அவலத்தை எத்தனை கனதியுடன் அறைந்து கூறி விடுகிறது.

மேற்குத் தூக்கணாங்குருவிகளின் வாரிசுகளாய் முளைத்த உள்ளூர் துரைத்தனங்கள் இந்த அனர்த்தங்களை இன்னும் வளர்த்துச் செல்வன.

*அத்தகைய*
*ஒரு முயல் கர்சிக்கக் கண்டாலோ*
*குரங்கு சிவிகை ஊர்ந்து வந்தாலோ*
*அமைதியாக நோக்குங்கள்*
*விரைவாகத் தாண்டுங்கள்*
*விரைவாக* (ப.43)

என ஒதுங்கி ஓடக்கூறும் கவி இன்றைய கையறு நிலையையே சித்திரிக்கிறார். இன்னொரு காட்சி ஆழ்ந்த சிந்தனைக்குரியது: தனது சொந்தச் சகோதரன் நையப்புடைக்கப்பட்டுக் கொல்லப்படுவதைக் கண்டு தேவாலயத்துள் ஓடி ஒதுங்கி பிரார்த்தனையில் யாவும் மறந்து, 'என் இருதயம் இலேசாக/ வெளியே வந்தேன்' என்பவனிடம் அவன் வீடு வந்த போது ஓடி வந்து அயலாள் சங்கதியைக் கூற, அவள் 'வாய் மூடு முன்னம் மறுத்தேன்; /தெரியாது- தேவாலயம் சென்றதால்' (ப.77) என்றுதான் சொல்ல முடிந்தது. இங்கே மதம் அபினியாக மட்டுமா பங்களிக்கிறது?

ஒதுங்கி ஒழிந்து மூச்சு உடலில் ஒட்டி இருக்கப் பிரயத்தனம் எடுக்கும் ஒரு சமூகம் என்பதால்,

*ஆனால்*
*மூச்சு விட வாய்த்த இவ்விரவுப் பொழுதிலாவது*
*என் நாடே*
*என் அன்பே*
*கண்ணுறங்கு* (ப.98)

எனப்பாடும் கவி வாக்கு திருப்பள்ளி எழுச்சி பாடுவது எப்போது? இன்று 'நான் மரம்' என்கிறது ஆபிரிக்கா!

நான் மரம்

*வெட்ட வெளியில்*
*காற்றில் கிறீச்சிடும்*
*முறுக்கேறிய*
*முரட்டு மரம் நான்!*
........
*இரவு முழுவதும்*
*முடிவின்றி அழுது அரற்றியபடி*
*ஆறுதல் அடைய மறுக்கும்*
*குரல் நான்!* (ப.89)

என்கையில் வெளிப்படும் 'ஆறுதலடைய மறுக்கும் குரலுக்குள்' எதிர்நிலையாய்ச் செயற்படும் 'மரம்' படிமம் பல்லாயிரம் அர்த்த பரிமாணங்களைக் கிளர்த்துவன.

இன்று சிந்தப்படும் இரத்தம், 'புயல் அடிக்கையில் மட்டும் பேசும் மரக்கிளையில்' இருந்து வடியும் பிசின் போல.

*ஆனால் எங்கள் இரத்தம் மட்டும்*
*அழிக்க முடியாதபடி*
*சுவரில் ஒட்டிக்கொண்டது*
*அடி மரங்களில் வடியும் காட்டுப்பிசின் போல.*
(ப.40)

இன்று நெடுந்துயிலில் உறைவது ஒரு நாள் மௌனம் கலைக்கும் என்ற ஆழ்ந்த புரிதலுக்குரிய அர்த்தங்களை இங்கு இனங்காணலாம். ஆயினும் இன்று-

*மின்மினி*
*நட்சத்திரத்தோடு போட்டியிடுகிறது*
*கொள்ளித் தீ*
*சூரியனோடு போட்டியிடுகிறது*
*குடுவைத்தண்ணீர்*
*வொல்ராவோடு போட்டியிடுகிறது*
*ஆனால்*
*பஞ்சத்தில் அடியுண்ட நாம்*
*எஜமானன் வாசலில்*
*கையேந்தியபடி* (ப.26)

எனும் படியாகத் தன் வீரியம் உணராத ஒடுக்கம்.

அதேவேளை ஆபிரிக்க மக்கள் வீரஞ்செறிந்த



படிப்பகம்

www.padippakam.com



போர்க் குணத்தையும் இத்தொகுப்பில் ஆங்காங்கோ காணமுடியும். 'முகில்களிடையே முழங்கும் இடியை' வரவேற்றுப்பாடும் கவி 'மின்னல் கீற்றின் மந்திரத்தை தம் இறக்கைகளில் கொண்ட/ பறவைகள்..' பற்றிக் கூறும்.
மேலும்-

*ஒளியின் கதவுகளில் கடவுளின் அம்புகள் அதிர்கின்றன*
*மரண நடனத்திற்கு ஊரடங்கு முரசுகள் வாசிக்கின்றன*
*பொங்கி எழும் அம் மறை பொருள்*
*இந்நூற்றாண்டின் கடைசித் தீபத்தை*
*தன் இரும்பு முகமூடியால் அச்சுறுத்துகிறது* (ப 38- 39)

என்றும் கூறும். அச்சுறுத்திய பழைய நூற்றாணஸ்டிற்குப் பதிலடியாகப் புதிய நூற்றாண்டை எதிர்வு கூறுவது போன்ற பூடகம் இடியும், மின்னல் கீற்று மந்திர இறக்கைப் பறவையும். அவை வரலாற்று மரத்தில் படிந்த காய்ந்த இரத்தச்சுவடுகளை எப்படி வாசிக்கும்? அந்தப் பழைய நூற்றாண்டுகளிலும்,

*பெறுமதி மிக்க*
*அக்கடைசி மூச்சுகள்*
*கலக்கும் போது*
*நாம் சூளுரைக்கிறோம்*
*'பழிக்குப் பழி'*. (ப 85)

புதிய நூற்றாண்டின் புதிய கலாசாரத்தைக் கட்டியெழுப்ப எழுச்சி கொள்ளும் புதிய தலைமுறை அதனை வெறும் பழிக்குப் பழியாகவன்றி புத்துலக ஆக்க முயற்சியாக அர்த்தப்படுத்தவும் கூடும். நேற்றைய ஆபிரிக்க அவலம் விடுதலைக் கனியைக் கூட கசப்புடன் தொடர்புறுத்திப் பார்ப்பது;

*உனதா பிரிக்கா அதுதான்!*
*அது தாங்கும்*
*கனி மெல்ல மெல்லக் கசப்புச் சுவை பெறலாம்!*
*ஏனா? விடுதலையின் இயல்பே அதுதானே*
*ஆனாலும் வேண்டும் அது!* (ப.05)

அந்நிய நுகத்தடியைத் தூக்கியெறிந்து விடுதலை உணர்வுடன் தன் வளத்தை புதிதாய் புனைகையில் மேலும் கடின உழைப்பு வேண்டப்படலாம் என்ற முன்னனுமானம் கவியை இவ்வாறு சிந்திக்க வழிப்படுத்தியிருக்கலாம். இதற்கு எடுத்துக் காட்டாக இன்னொரு கவிதை அமைவதைக் காணலாம்:

*பொறுமைக் களியாட்டம் இறந்து விட்டது*
*சூறாவளியைத் தீட்டுகிறேன், எதிர்கால*
*உழவு சால்களுக்காக*
*உனக்காக*
*கானாவையும் திம்புக்துவையும் மீளப் படைப்போம்*
*குடிசைகள் தோறும்*
*வலிய உலக்கைகளின் லயத்துக்கு*
*கிற்றார் இசை தாவும்* (ப.12)

புதியது புனையும் உழைப்பும் இசைவான கலையும் சங்கமிக்கும் புதுக்கோலம் இது. அந்த இனிமைக்காக



படிப்பகம்

www.padippakam.com



*- பாரையை உறுதியாகப் பற்றி*
*மண்ணைக் கிண்டு,*
*மட்டப்படுத்து!*

*ஆபிரிக்கா எங்கள் தாய்*
*அவள் எங்களிடம் திரும்பிவரும்வரை*
*ஆறுதல் இல்லை, எமக்கு!* (ப.76)

இந்த இலக்குக்கான முனைப்பு, உலகெங்கும் சிதறி வாழ்வைத் தொலைத்த ஆபிரிக்க மக்களை விடுதலைத் திசைக்கு இட்டுச் செல்லும்.

*சுவாசிலாந்தின் சுரங்கங்கள் தொடக்கம்*
*புழுங்கி வியர்க்கும் ஐரோப்பிய தொழிற்சாலைகள் வரை,*
*ஒளி மிக்க எங்கள் காலடிகளின் கீழ்,*
*வசந்தம் மீண்டும் மலரத்தான் போகிறது!* (ப. 07)

திரைகடலோடி அகதிச் சான்றிதழ் வென்ற எங்கள் சொந்தச் சகோதரர் குரல் போல் இல்லை?
முழுத் தொகுப்பும், சொந்த மண்ணையும் வாழ்வையும் தொலைத்த எமது வாழ்வைப் போலத்தான்.

*கோடிமுறை கும்பிடுவேன் ஜொஹனெஸ் பேர்க் நகரே!*
*குறை நினையேல், நினை வணங்கும் பொழுதில் எனதொரு கை*
*தேடுகின்றது அடையாள அட்டை சட்டைப் பையுள்!*
*திருநகரே உயிரை அங்கு சேமித்து வைத்தேன்!* (ப.86)

எனும் போது தாய் மண்ணை வணங்க முடியாமல் எமது கரங்கள் முடக்கப்பட்டதைப்போல உணர முடியாமல் போகுமா?

ஆக, என்னதான் வேறுபாடுகள் இருந்தாலும் ஒடுக்கப்பட்டவர் ஏக்கக்குரலும், வீறு கொள் எழுச்சி முழக்கமும், புதிது புனையும் முனைப்பும், பொதுமை நாட்டமும் எங்கும் ஒன்று போலத்தான். இன்றைய பெரும்பாலான ஈழத் தமிழ்க் கவிதைகள் போலவே ஆபிரிக்கக் கவிதைகளும் வெறும் வெற்று ஆரவார முழக்கங்களாக அல்லாமல் ஆழ்ந்த படிம- குறியீட்டு- உருவகப் பாங்குகளுடன் கலைத்துவம் குன்றாமல் வெளிப்படுத்தி நிற்பதைக் காண முடிகிறது.

இருப்பினும் பிழை திருத்தத்தை மீறியும் எழுத்துப் பிழைகள் உள்ளமையை சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது அவசியமே. அத்தோடு ஆபிரிக்க மக்களின் அவலம் சார்ந்த கவிதைகளை அதிகளவு தெரிவு செய்த ஆசிரியர் நம்பிக்கை தரும் கவிதைகளையும் இணைத்திருந்தால் தொகுப்பின் சமநிலை பேணப்பட்டிருக்கும்.

முழுமையாகப் பார்க்கும் போது எம்மையே பார்ப்பது போன்ற பிரமிப்பு. கவிஞர் முருகையன் தனது முன்னுரையில் பாரதிதாசனைத் துணைக்கழைத்து ‘மானுட சமுத்திரம் நானென்று கூவு / ...புவியை நடத்து பொதுவில் நடத்து’ எனக் கூறி, மேலும் கூறுவன கவனிப்பிற்குரியன. எமது மண்ணுக்கும் காலத்துக்கும் பொருத்தமான அரிய வரவு இந் நூல்.

**நடேசன்.இரவீந்திரன்**

■




படிப்பகம்

www.padippakam.com





**இந்த மழை ஓயாதோ**

கனகரவி

வெளியீடு: வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம்

வவுனியா.

விலை 80.00 ரூபா

90 களின் பிற்பகுதியில் எழுத்துலகில் பிரவேசித்த கனகரவி, 'விடுதலைக்காய்' என்னும் கவிதைத் தொகுப்பின் மூலம் தன்னை வெளிப்படுத்தினார். தற்போது 'இந்த மழை ஓயாதோ' தொகுதியினால் தனது உணர்வுகளின் இருப்பை மீண்டும் ஒரு முறை நிறுவியுள்ளார்.

'தமிழே கவிதை தானோ?' என வியக்கும் வகையில் கவிதைத் தொகுதிகளின் பிரசவங்கள் மிகவும் துரிதமாக நம் மத்தியில் நிகழ்வது மகிழ்வூட்டக்கூடிய விடயமெனினும் சிறிதே பயமும் ஏற்படுகிறது. தொகுப்புகளின் தொடர் வருகை சமூக மாற்றத்திற்கான படிக்கற்களாக அமைய வேண்டும் என்பதே அது.

கனகரவியின் கவிதைகளின் செல்கையானது ஒவ்வொரு தமிழனதும் அல்லது சமூக அக்கறை சார்ந்த மனிதனதும் ஆழ்மனப் படிவுகளை தீண்டிக் கிளர வைக்கும் மீள் நினைவூட்டல்களாய் அமைவது சிறப்பான அம்சமே. மழைத் துளிகளாய் சரந்தொடுக்கும் கவிதைகளின் தலைப்புகளில் வேகமும், எழுகை உணர்வும் வீச்சிடுவதை கனகரவியின் 'என் மனதிலிருந்து...' என்னும் தன்னுரை 'காலத்தின் உண்மைகளைப் படைத்துவிட எழுவோம், எழுவோம்' என மனப்பதிவாக்கியுள்ளது.

இவரது கவிதைகள் நேரடித்தன்மைகளைக் கொண்டு ஆழமான விடயங்களை வெளித்திறந்து வைத்த போதும் வார்த்தைப் பிரயோகங்கள் சாதாரணமானவையாகவும் ஆழ்ந்த கவனமற்றுக் கோர்க்கப்பட்டவையாகும் உள்ளமை பல கவிதைகளை குறைத்து மதிப்பிடவைக்கின்றன.

கவிதைகளின் சொற்பிரயோகத்திலும் கோர்வையினுடைய அமைவிலும் தான் வார்த்தைகளின் ஆழமானது விகசிப்பாயும் வீச்சுடையனவாயும் அமையும். கவிதைகளில் இணையும் வார்த்தைகள் ஒவ்வொன்றும் கவிதையின் பெறுமதியை பிரகடனப்படுத்துவதாய் அமைவதைக் கவனத்திற் கொள்வது அவசியமானது.

கனகரவி, கவிதையின் நேரடித்தன்மையிலும் அதன் பொருள் சென்றடையும் தூய்மையிலும் கவனம் கொண்டுள்ள போதிலும் படிமம்- குறியீடுகள் என்ற இன்னொரு பரிமாணத்தை பார்க்க முனைந்திருக்கிறார். 'வளர்ப்பு நாய் என்பதால்' கவிதை குறியீட்டுப்பொருள் அமைந்ததாய் இருந்தபோதிலும் கட்டமைப்பிலும் நேர்த்தியிலும் கவனங்கொள்வது காத்திரமான படைப்புக்களை வெளிக்கொண்டுவரும்.

'தனது பற்களில் படும் குருதி
தனது இனத்தினது எனினும்
நக்கிச் சுவைக்கும்..'

மிகவும் அப்பட்டமாய் உண்மைகளைக் காட்டமாய் அடுக்கி வைக்கும் இவரது உணர்வுகளின் வெளிப்பாட்டுக்குச் சான்று இக்கவிதை.சமகால விடயங்களை தனக்குரிய இயல்போடு யதார்த்தமாய்ச் சொல்லும் கனகரவியின் கவிதைகளில் 'போர் தந்ததும் தரப்போவதும்' , 'நிமலராஜன் நினைவாக', 'காணவில்லை' போன்றவற்றில் விதந்துரைக்கக் கூடிய வீச்சுக்கள் புலப்படுகின்றன. **'இந்த மழை ஓயாதோ'** தொகுப்பில் கனகரவி அழகியல் உணர்வினை வெளிப்படுத்துவதிலும் கவிதைகளின் வடிவ உத்திகளில் இறுக்கத்தினையும் வீச்சினையும் விசாலப்படுத்திக்கொள்ள வேண்டிய தேவை முன்னிற்கிறது. எனவே ஆழ்ந்த தேடல் காத்திரமான படைப்பைக் கொடுக்கும் என்பதை மனங்கொண்டு கனகரவி இனிவரும் படைப்புக்களில் புதிய பரிமாணத்தை எட்ட முயலவேண்டும்.

குறிப்பாக, கவிதைத் தொகுப்புகள் அச்சமைப்பிலும் அதன் வடிவமைப்பு நேர்த்தியிலும் அதிக கவனம் செலுத்த வேண்டும், இந்த நேர்த்தியைத்தான் கனகரவியின் இந்த மழை ஓயாதோவும் பெற்றிருக்க வேண்டும் எனக் கருதுகிறேன்.எனினும் எமது சமூகத்தின் யதார்த்த வாழ்வியலைப்பேசும் கவிதைகளாலான 'இந்த மழை ஓயாதோ' தொகுதி இச் சூழலில் தவிர்க்க முடியாத பதிவாகவே அமையும்.

**மயூரன்**



படிப்பகம்

www.padippakam.com





**சொல்லில் எழுதிய வாழ்வு**
அந்தோனிப்பிள்ளை நிஷாந்தன்
வெளியீடு: நிலம் வெளியீட்டகம்
வவுனியா.
விலை 80.00 ரூபா

அன்மைக்கால ஈழத்து இலக்கியப் போக்கில் கவிதை ஒரு காத்திரமான இடத்தைப் பெற்று வழர்ச்சியடைந்து வருவது அவதானிக்கத்தக்கது. இலக்கிய வரலாற்றில் வலுவாக தமது கால்களை பதிக்கும் நோக்கில் பல கவிஞர்களின் படைப்புகள் தொகுதிகளாக வெளிவந்து கொண்டிருக்கின்றன. அந்தவகையில் கவிஞர் அ.நிஷாந்தனின் சொல்லில் எழுதிய வாழ்வு என்ற கவிதைத் தொகுதி ஒரு புதிய கவிஞனை இலக்கிய உலகிற்கு அறிமுகப்படுத்தியுள்ளது. எந்தவொரு சஞ்சிகையிலும் பிரசுரிக்கப்படாத இவரது கவிதைகள் தன்னுள் புடம் போடப்பட்டு ஆளுமை மிக்கவையாக வாசகர்கள் முன் வந்துள்ளது. "கவிதையை தமிழ் கற்றவன் மட்டுமல்ல நல்ல சிந்தனையுள்ள எல்லோருமே எழுதமுடியும்" என்று சொல்லில் எழுதிய வாழ்வு கவிதைத் தொகுப்பின் முன்னுரையில் யாழ் பல்கலைக்கழக வவுனியா வளாக முதல்வர் குறிப்பிட்டிருப்பது கவனிப்பிற்குரியது.

போரின் கொடூரங்களாலும் பொருளாதார வறுமையினாலும் இறுகிப்போன வன்னி மக்களின் வாழ்க்கையின் பல்வேறுபட்ட தன்மையினை தனது கவிதைகளாக வெளிப்படுத்தியுள்ளார். இக்கவிஞர் அவலவாழ்வின் மையங்களை முதன்மைப்படுத்தி தனது படைப்புக்களில் வெளிப்படுத்தியுள்ளமை இத்தொகுப்பின் மிக முக்கிய அம்சமாகும். தனக்கென ஒருதனித்துவத்தைப் பேணிக்கொண்டிருக்கும் இக்கவிஞர் கவிதை, பாடல் என இரண்டு தளத்தில் தன்னை வெளிப்படுத்தியுள்ளார். இவருடைய கவிதை சொல்லும் முறைமையில் கையாண்டிருக்கும் இலகு தன்மை குறிப்பிடத்தக்கதாக அமைந்தாலும் சொற்பிரயோகங்களில் இவர் காட்டும் தளர்வு சில கவிதையை இறுக்கமற்றதாகக்கியுள்ளது. எனினும் இத்தொகுப்பு இவருடைய முதற்தொகுப்பாக இருப்பதாலும் இவர் வளர்ந்து வரும் இளம் படைப்பாளன் என்பதாலும் இவற்றை மனங்கொண்டு பார்த்தால் விமர்சனங்களற்று தொகுப்பிலுள்ள கவிதைகளை ஊக்குவிக்கலாம் என்பதே எனது எண்ணம்.

**பாஸ்கரன்**

"எல்லாம் புரிந்த பின்னாலும் சிந்தனையைத் தொட்டுச்சிலிர்ப்பது தான் கவிதை. ஆனால் எதுவுமே புரியாமல் இருப்பது தான் கவிதை, எந்த அளவுக்குப் புரியவில்லையோ அது அந்த அளவுக்கு நல்ல கவிதை என்பது போன்ற புரிதல் வியாக்கியானங்களும் இங்கே தரப்படுகின்றன. இது ஏதோ புதுக் கவிஞர்களின் புலம்பல் அல்ல. மரபுக்கும் இந்த மரபு உண்டு. புரியாத கவிதைகள் குறித்து அதிகம் பேசப்படுவதால் அதில் மயங்கிப் பல கவிஞர்கள் இப்படி எழுதத் தொடங்கி விட்டார்களோ என்று எண்ணத்தோன்றுகிறது. மரபில் புரியாமல் எழுதும் வழக்கம் இருந்தது. புதுக்கவிதையிலும் அது நீடிக்கிறது. இதில் ஏதாவது அர்த்தம் இருக்குமோ என்று குழம்ப வைக்கிறார்கள்."

**நா.முத்துநிலவன்** 'எழச்சியகம்', 96, சீனிவாசநகர், 3ம் வீதி, புதுக்கோட்டை 622 004, இந்தியா.



படிப்பகம்

www.padippakam.com





**வெட்கம் தொலைத்தது**
நா.விச்வநாதன்
ரிஷபம் பதிப்பகம், இரண்டாவது தளம்,
எண், 31/45, இராணி அண்ணா நகர்,
பி.டி.இராஜன் சாலை கலைஞர் கருணாநிதி நகர்,
சென்னை- 600 078.

கவிதையின் குரல் பலமானதும் தீவிரம் மிக்கதுமாகும் ஒரே தடவையில் சம தளத்திலிருந்து கொண்டே அகன்ற உலகை பார்க்கக் கூடியது கவிதை. கவிதை முன்வைக்கும் பிரச்சினைகளும் கேள்விகளும் தேங்கிச்சுழிப்பதாக இருக்காது, மாறாக அலையின் வேகத்தோடு பெருகிச்செல்வது. இந்தச் செல்லுகையின் பிறகு ஏற்படும் உயிரும் உணர்வும் சேர்ந்த படபடப்புத்தான் வாசகனை யோசிக்க வைக்கும் என நினைக்கின்றேன். இந்தப் படபடப்பைத்தான் விச்வநாதனின் "வெட்கம் தொலைத்தது" கவிதைத் தொகுதியிலும் உணர முடிகின்றது.

விச்வநாதனின் கவிதை உலகம் மந்திரங்களாலானது. அவரின் கவிதைகள் ஏற்படுத்தும் ஈர்ப்பு வாசகனுக்குப் புதிய அனுபவங்களை சொல்லித் தந்து கொண்டே இருக்கும் என நினைக்கிறேன். அவருடைய கவிதையின் உணர்த்தலுக்கு சிக்கலில்லாத மொழி வளைந்து கொடுக்கிறது. வெறுமனே கவிதைகளை சூட்சுமமான சொல்லடுக்குகளுக்குள் சிக்கவைத்துக்கொண்டு கவிதை எழுதுபவர்களில் இருந்து இவர் வேறுபட்டு நிற்கின்றார். இந்த சூட்சுமத்தையே பலரும் நுண்ணனுபவம் என்று பேசி மூளையைக் குழப்புகிறார்கள்.

விச்வநாதனின் கவிதைகளில் இந்த சூட்சுமங்கள் இல்லை. தனது சூழலின் பல அனுபவங்களையும் கவிதையாக்கியிருக்கிறார். சக மனிதர்களையும் அவர்களது உணர்வுகளையும் இவரின் கவிதைகளில் காண முடிகின்றது. பத்மா, பார்வதி ரீச்சர், ஆப்பக்கிழவி, வேலம்மாக்கிழவி, ராக்காயி, ராஜலட்சுமி என சூழலில் வாழ்பவர்கள் தான் அனேகமான கவிதைகளில் உயிர்வாழ்கிறார்கள். பெரும்பாலான கவிதைகளில் இவரின் தாத்தா அடிக்கடி வருகிறார். இது இவருக்கு தவிர்க்க முடியாமல் நேர்ந்திருப்பினும் ஒரே கவிதையை திரும்பத்திரும்பப் படிப்பது போன்ற தன்மையையும் ஏற்படுத்துவதை தவிர்க்க முடியாதுள்ளது.

தன்னை ஒரு தலித் என முன்னுரையில் அடையாளப்படுத்தும் கவிஞர் கவிதைகளில் தலித்துக்களை முன்வைத்த வாழ்வு முறைகளையும் அவர்களுக்குள்ள பிரச்சினைகளையும் பெரிதாக இனங்காட்டத் தவறியே உள்ளார். கவிதையின் இயங்கு சூழல் அதுவாக இருந்தாலும் தெளிவான முன்வைப்பு போன்றவற்றை கவிதைகளில் காணமுடியாமற் போனது பெருங்குறையாகவும் ஏமாற்றமாகவும் இருக்கிறது. இந்த இடத்தில் மதிவண்ணனின் "நெரிந்து" தொகுதி தலித்துக்களின் பிரச்சினைகளை வலுவோடு பேசியிருப்பது நினைவு கொள்ளத்தக்கது. கவிதை வாழ்வின் தீவிரத்தையும் கொடுமையையும் அவலங்களையும் மகிழ்ச்சியையும் பேச வேண்டும். எந்தப் பிரச்சினையும் வாசகனுக்குத் தெரியாததொன்றல்ல. அந்தப்பிரச்சினைகளை உணர்வில் தீப்பிடிக்க வைப்பதற்கே கவிதை தேவைப்படுகிறது.

விச்வநாதனின் கவிதைகள் ஏற்படுத்தும் தீவிரத்தை கவிதைகளுக்கான தலைப்புகளில் காண முடியவில்லை. "அது, வேகம், கவலை, சொல்தேடி, பயன், மிச்சம்.. " எனத் தொடரும் கவிதைகளின் தலைப்புக்கள் ஒருவித ஈர்ப்பையும் ஏற்படுத்தாது வெறுமனே தலைப்புக்களாகவே இருக்கின்றன. இது குறித்து அவர் சிந்திக்கலாம் என நினைக்கிறேன்.

அண்மைக் காலங்களில் தமிழகத்திலிருந்து வந்த கவிதைத் தொகுதிகளில் "வெட்கம் தொலைத்தது" தொகுதி ஒரு வித்தியாசமான உணர்தலையும் ஏனைய தமிழகக் கவிஞர்களில் இருந்து விச்வநாதன் வேறுபட்டு நிற்பதனையும் விளங்கிக்கொள்ள முடிகிறது.

**சித்தாந்தன்**



படிப்பகம்

www.padippakam.com



## புகையிரத மனிதர்



நகர் சேர் கடுகதி புகையிரதம்
ஓடிக்கொண்டேயிருக்கிறது தன்பாட்டில்.
எதிர்த்திசையோடும் மரங்களை
வழிந்தோடும் மழைத்துளியை
வீசும் காற்றை
கன்றுக்காய்க் கதறும் மடிகனத்த காட்டெருமையை
குளத்தருகே குளித்தழகு பார்க்கும் குசுமாவதியை
எதையும்
எதைப்பற்றியும்
யாரையும் யாரைப்பற்றியும்
கவலையின்றி ஓடிக்கொண்டிருக்கிறது.
அது,
நான் இறங்குவதையோ
இறங்கிப்பின்னேறுவதையோ
ஏறிப்பின்னுறங்குவதையோ
உறங்கலின் நடுவே
விசிலின் சப்தத்தில் உயிர்பெற்றெழுதலையோ
அறியாது, பிரக்ஞையின்றி
ஓடிக்கொண்டிருக்கிறது தன்பாட்டில்,
அதற்குப்பணிக்கப்பட்டது
அதுவே அதுவாய்ப்போலும்.
ii
என் வீட்டருகே கடைநடத்தும்
தொந்தி பெருத்த சுப்பையாவும்
வசவு சொல்லித்திட்டுமவர் மனைவி சரசுவும்
சங்கரனும் சந்தியாவும்
முகம்மதுவும் மும்தாஜும்
பேணாட்டும் றோசியும்
எல்லோரும்,
எல்லா மனிதரும்
கடுகதி நகர் சேர் புகையிரதமாய்
பணிக்கப்பட்டவற்றின் பிரக்ருதிகளாய்...

*கி. சிவஞானம்*

## நடக்கக்கூடாத கண்காட்சி

எலும்புக் கூடுகளின்
கண்காட்சியென்பது
இப்போதெல்லாம் எம் தேசத்தில்
இயற்கை நிகழ்வு போலாகிற்று.

கை பிடித்த கணவன்
தன் துணை மயிலின்
புள்ளி போட்ட சேலையிறகை
அடையாளங் காண்பதுவும்....

பெற்றெடுத்த உதிரப்பூ
பிஞ்சுக்கையால் கொஞ்சி விளையாடிய
தன் தாய்நிலாவின் தங்க வளையல்
இதுதானென கண்ணீர் வடிப்பதுவும்.....

வீடு பார்க்கப் போனவரின்
கோடு போட்ட சட்டையை
அடையாளங் கண்டு வாடிப் போகும்
பெண்மலரின் வேதனை மூச்சும்.....

நிகழ்கால தரிசனங்களாகின்றன...

செம்மணியில் மட்டுமல்ல.
அம்மணியின் அராஜகக் கழுகுகள்
எங்கெங்கு கூடுகட்டினவோ
அங்கெல்லாம்
காணாமற்போனோர் கண்டுபிடிக்கப்படுகின்றனர்
எலும்புருவங்களாக?

*யாழ்வீரன்*

"மொழி தனது சொல்லுதலின் சாத்தியப்பாடுகளைத் தொடர்ந்து பரிசோதித்துக் கொண்டேயிருக்கும் ஒரு அதீத மொழிக்களமும் குறியியல் மண்டலமுமே கவிதையின் இயங்குதளங்கள் என நாம் பொதுவாக அடையாளம் காணலாம்"



படிப்பகம்

www.padippakam.com



## மழை

செந்தில்குமரன்

மழை வரப் போகுது
மழைவரப்போகுது
கெதியாய்த் தோண்டி
எங்கட பிள்ளையள உள்ளுக்கிருந்து
வெளியில எடுங்கோ..

கந்தையரின்ர மகளும்
கணபதியின் மருமகனும்
செல்லத்தின்ர அவரும்
செபஸ்ரியாம் பிள்ளையும்
ஓங்கி விடும் மூச்சு
ஒருத்தருக்கும் கேட்கேல்லையோ?

பாவி மக்கள் எங்கள் பிள்ளைகளை
கதறக்கதறக் கொண்டு போட்டபோது
கூவி நாங்கள் போட்ட குரல்
சாதிசனம் ஒருத்தருக்கும்
சத்தியமாய்க் கேட்கேல்லையோ?

ஆச்சி நான் வந்து தான்
ஆட்சி செய்தனென்டால்
பூச்சி புழுக்கூட
புறத்தால வராதெண்டு
சொன்னவைக்கும், கூட
கோசங்கள் போட்டவைக்கும்
கொஞ்சமும் கேட்கேல்லையோ?

அவுஸ்ரேலியாவில் உங்கட
அவையள்
கனடாவில உங்கட
கடைக்குட்டி
செம்மணியில நாங்கள் மட்டும்
செத்துப்போனம்

O/L எடுத்துப்போட்டு
ஒரு தொகை பக்கத்தில்
A/L எழுதிப்போட்டு
எத்தனை பேர் கம்பஸ் முடிச்சுப்போட்டு
உங்கட காமத்தால்
செம்மணியில் புதஞ்சதுகள்
தோண்ட நாதியில்லை உங்களிடத்தில்.

சிவில் நிர்வாகம் எண்டு சொல்லி
சிப்பிலி ஆட்டிப்போட்டு
கமறாவில் படம் எடுத்து
கவனமாய்ப் பார்த்தால்
கெதியாய்ப் பிடிக்கலாம் என்ட- உன்
வாய் வீச்சுக் கேட்குதடா- எங்களுக்கு.

ஆவி ஓயும் வரை
பாவி நான் கத்துவேன்
மேவி மழைத்தண்ணி நிண்டாலும்
ஓங்கி நான் கத்துவேன்
உங்கட கழுத்துக்கு
கந்தப்பு கடையில
என்ர கணக்கில ஒரு முழக்கயிறு வாங்குங்கோடா.

●

## பத்மா ஜெயச்சந்திரனின் இரு கவிதைகள்

### ‘வதை’

வாருங்கள்
வந்து
என் இரத்தத்தை ருசியுங்கள்
என் உயிரை வதையுங்கள்
உங்கள் மோகம் தீரும் மட்டும்
என்னைப் புசியுங்கள்
எனது காலமற்ற இக்காலத்தில்
நீங்கள்
என்னைப் பகிரங்கமாக வதைக்கவும்
வீதிகளில் கொன்று போடவும்
நான் சகித்துக்கொள்கிறேன்.
எனக்காக வரும் ஒரு காலத்தை
மிகவும் மேன்மையுறச் செய்வதற்காக.

●

### ‘எரிமலை’

மூக்கணாங் கயிறுக்காய்
நீ வருந்துவதைப் பார்க்கையில்
என் நிறம் சிவப்பாகிறது

உன் உடையின் நிறத்தையும்
உன் கழுத்தின், நெற்றியின்
வெறுமையைக் காணும் போதும்
பிறருக்காக உன்னை ஏன்
நீ வருத்துகிறாய்
என்று கேட்கத்தோன்றும்..

அந்த எண்ணம் என்னை
சாம்பலாக்கட்டும் எனினும்
என் மனமே எரிமலையாய்
உனக்காக
கனன்று கொண்டே இருக்கும்.

●



படிப்பகம்

www.padippakam.com



## அடையாளம்

**வி. மதுமிதா**
ஆண்டு – 09 20.08.1999

தள்ளாடி நடந்து வரும் மக்கள் குழாம்
ஏக்கத்திலே தவிக்கும் மனிதர் கூட்டம்

சுட்டெரிக்கும் சைத்தான்கள்
சுள்ளியைப் போல் எம்மைச் சாம்பலாக்கி
கொதிக்கும் அச் சாம்பலினால் மீண்டும்
எம் உறவை அழிப்பர்

எப்படிப் பிறந்தோம் இப்போ
எப்படி வாடுகிறோம் வருந்துகிறோம்
கட்டடங்கள் இடிந்து போக
கட்டிய துணிகளும் உக்கிக் கந்தலாய்ப் போக
கல்லாய்ச் சமைந்து நிற்கும்
கற்பூரத் துளிகள் நாங்கள்

தண்ணீருக்குத் தஞ்சம் புகுந்து
தாகத்தால் உயிரை விட்டு
கறை படிந்த முகத்துடனே
எலும்புக் கம்பியில் சிறையிருக்கும்
எங்கள் வாழ்வு.

அடையாள அட்டைகளைக் கிழித்துப்போட
நினைக்கையிலே
அடையாள அட்டை இல்லாவிட்டால்
தலைகீழாய் வைத்தடிப்போம் என்று கூறும்
அந்நியர் நடுவில்..

என்றாலும்
வில்லங்கக் கம்பிகளைத் தகர்த்தெறிய
வீரராய் நாம் விரைவோம்.

●

**"நிலத்தில் காதலை ஏற்படுத்துவதும் அதனை ஆற்றுப்படுத்துவதும் எங்களுக்கு காலமிட்ட பணிகள். இவை மூலமே 'மௌனம்' உடைக்கப்படும். இப்பாதை இப்போது இலக்கிய உலகில் வெகுவாகத் துலங்கத் தொடங்கி விட்டது. உங்களுக்கான பாதையும் பணியும் மிகத் தெளிவாக முன்னுள்ளது."**

பா. குமார்





படிப்பகம்

www.padippakam.com

# ஒரு படையினனின் பாடல்

வலம் வருகின்றன பிசாசுகள்
பிண நாற்றம் சுமந்து என் வறுமை வீதிகளில்
சில்லறை உதிர்ப்புடன்,

பச்சை மரங்களின் பனித்துளிக் கண்களிலும்
பட்ட மரங்களின் பாலைவனக் கண்களிலும்
துளிர் மிகு தோட்ட வெளிகளிலும்
ஆணி அடிக்கவே அனுப்பப்பட்டேன் அவற்றினால்.
இங்கு
கொட்டும் மழையிலும் கொடிய பனியிலும்
நடந்து போகும் பிஞ்சுக்கால்களை கொலை செய்யவே வந்தேன்
இரத்த மரங்களில்
என் கொலைக் கூடுகளைக் கட்டவும்
குறிப்புகளற்ற புதைகுழிகளை உருவாக்கவுமே
அவர்கள் எனக்குச் சில்லறை உதிர்க்கிறார்கள்.

யாரின் கவனத்தையும் ஈர்க்க முடியா
கறுப்புக் கோடுகளாய் என் விருப்பு வெறுப்புகள்
அந்தரத்தில்.

II

தங்கள் இரத்தத்தில்
தோணி விடப்படுவதையோ
தங்கள் எலும்புகளில் பிசாசுகள் ஏணி செய்து
எல்லை தாண்டுவதையோ அறியாமல்
அழிகிறது ஒரு கூட்டம்
பிசாசுகள் என்னைத்துரத்துகின்றன
அவர்களை நோக்கி,

தலை சிலுப்பி
வலம் வரும் பிசாசுகள்
சில்லறையை உதிர்க்கின்றன என்னை நோக்கி.

கவனத்தை ஈர்க்க முடியா
கறுப்புக் கோடுகளாய் என் விருப்பு வெறுப்புகள்
அந்தரத்தில்.



அந்தோனிப்பிள்ளை நிஷாந்தன்

படிப்பகம்

www.padippakam.com

கவிஞர் நா.முத்துநிலவன் எழுதும்

# கவிதையின் கதை

## தமிழ்க் கவிதை வரலாறு மற்றும் நல்ல தமிழ்க் கவிதைகள் பற்றிய அரிய களஞ்சியம்

40% தள்ளுபடியில் முன் வெளியீட்டுத்திட்டம்

* 'ஆதிச் சங்க'காலம் முதல் இன்றைய 'சாதிச்சங்க'காலம் வரையிலான தமிழ்க்கவிதையின் பரிணாம வரலாறு
* இருபதாம் நூற்றாண்டின் –மரபுக் கவிதைகள்
* இருபதாம் நூற்றாண்டின் –புதுக்கவிதைகள் மற்றும் ஹைக்கூ கவிதைகள் என்னும் முப் பெரும் பிரிவுகளில்
* உள்ளடக்க –உருவ மாற்றங்கள்– சமூகக் காரணி, சான்றுகள்
* அந்தந்த வடிவ– சிறந்த கவிதைகள், தொகுப்புகள், பகுப்புகள்

## –கவிதையின் கதை–

கவிதை வரலாறு மட்டுமல்ல, நல்ல கவிதைகளுக்கான அடையாளமும் கூட.
இது வெறும் பட்டியல் அல்ல விமர்சனம்

* நூற்பதிப்பு: காலம் வெளியீடு, மதுரை 625 002.
* விலை ரூ.165/–

பணவிடை(M.O), வரைவோலை(D.D), காசோலை(Cheque) அனுப்பவும் மற்றும்

தொடர்புகளுக்கும்

நா.முத்துநிலவன்
'எழுச்சியகம்' 96,சீனிவாச நகர் 3ஆம் வீதி,
புதுக்கோட்டை,தமிழ்நாடு.

தொலைபேசி : 04322– 23423, 23523
தொலைநகல் (Fax) : 04322– 22434
மின்னஞ்சல் (e-mail): muthunilavan@yahoo.com



வவுனியாவில்
**'கவிதையின் கதை'** கிடைக்குமிடம்
'நிலா' வெளியீட்டகம்
87, வியாசர் வீதி, தோணிக்கல், வவுனியா.



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

இப்பக்கத்திற்கான விளம்பர உதவி



வவுனியாவில் தினசரிப் பத்திரிகைகள் சஞ்சிகைகளின்
விநியோகஸ்த்தர்களான

கவிதா ஸ்ரோர்ஸ்

இல.05
பஸ் நிலையம், வவுனியா.

024-22646

படிப்பகம்